# மூன்றும் ஆறும்





## மீரா

# மூன்றும் ஆறும்

**மீரா**

**அன்னம்**
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

மூன்றும் ஆறும் / © மீரா / முதற்பதிப்பு: 1967 / ஐந்தாம் பதிப்பு: ஆகஸ்ட் 1996 / ஆறாம் பதிப்பு: அக்டோபர் 2003 / வெளியீடு: **அன்னம்**, மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7 / அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி / **விலை. ரூ. 35.00**

## டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களின்

# அணிந்துரை

''மூன்றும் ஆறும்'' என்னுந் தலைப்பில் கவிஞர் திரு.மீ.இராசேந்திரன் (மீரா) இயற்றி வெளியிடும் கவிதை நூலினைப் படித்து மகிழ்ந்துள்ளேன். அவர், சொல்லழகும் கருத்தழகும் நிரம்பிய கவிதையாற்றும் தகுதியுடையவர் என்பது முன்னரே அறியப்பட்ட செய்தி. தமிழ் மொழியின் வளர்ச்சியிலும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திலும் அவர் நாட்டமுடையவர் என்பது இத்தொகுப்பாலும் உறுதியாகிறது.

எளிய சொற்களைக் கொண்டு ஆழ்ந்த கருத்துக்களை நயம்பட உரைக்கும் அவரது திறத்தினைப் போற்றுகின்றேன். பல இடங்களில் அவரது நகைச்சுவை, செய்யுளுக்கு மெருகூட்டியுள்ளது.

கவியரசர் முடியரசனாரிடத்தில் அவர் பெருமதிப்பு வைத்துள்ளார். கவிஞரைக் கவிஞர் போற்றுவது தக்கதே. வீரம், கருமை முதலிய தலைப்புக்களில் வந்துள்ள அவருடைய கவிகள், அவரது அவையடக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

கற்பரசி கண்ணகியிடத்திலும், அவர் திறம் இயம்பிய சேரர்கோனிடத்திலும், இக்கவிஞர் மிக்க ஈடுபாடுடையவர். பல இடங்களிற் கண்ணகியின் திறம் ஓதப்பட்டுள்ளது.

''காதுக்குக் கைக்கதவா போடுகின்றோம்,''

''புதிதாய் வரும் படத்தைப்
போய்ப் பார்க்க வழியுண்டா.''
''ஏட்டில் எழுதாமல்
இதயத்தில் எழுதிவைத்த
நாட்டுப் பாடல்,''

''கண்ணன் காலத்தில் ஒரு கார் ஏது''

''ஈக்கடியும் கொசுக்கடியும்
இருந்தாலும் தெரியாத
தேக்கடியும்.....''

''நிலமங் கைக்கு நெற்றியின் முத்தை
வழங்கி வழங்கி வள்ளல் ஆகிறான்''

என்று அவர் பாடியுள்ள இடங்களில் உயிர்த் துடிப்புக் காண்கிறேன்.

'அருகிருந்து கூந்தலினைக் கோது வார்கள்
அது கருப்பே என்பதனால்! மாறி, வெள்ளை
உருவெடுத்து விடுமானால் பின்னர்த் தேடி
ஒருபயல்தான் வருவானா?''

போன்ற இடங்கள் உலகியலைக் காட்டுவன.

பழங் கதைகள் பேசுவதைக் காட்டிலும் முன்னேற் றத்திற்கு வழி வகுக்கவேண்டும் என்னும் இக்கவிஞரின் குறிக்கோள் போற்றுதற்குரியது.

அவர் வெற்றியுறுக.

மதுரை
20.5.81

அ. சிதம்பரநாதன்

# டாக்டர் நா. இலக்குமணப்பெருமாள்
# அவர்களின்
# முன்னுரை

நாம் வாழ்கின்றோம் என்பதைவிட வாழ்வதற்காகப் போராடுகின்றோம் என்பதே பொருத்தமாகும். அமைதியும் சாந்தமும் நிறைந்ததுதான் வாழ்க்கை என்று கொண்டால், அத்தகைய வாழ்க்கையை நுகரும் பேறு இங்கு இதுவரை எவ்வுயிர்க்கும் கிட்டவில்லை. ஆனால் நாளை வாழ்வு நல்வாழ்வாக அமையலாம் என்ற நம்பிக்கை எல்லாவுயிர்களுக்கும் உண்டு. அந்த நம்பிக்கையின் விளைவுதான் போராட்டம். ஒரு மனிதனின் வாழ்க்கையை எழுதுகின்றோம் என்று சொன்னால், அவன் வாழ்வதற்காக நிகழ்த்திய போராட்டங்களை எழுதுகின்றோம் என்பதுதான் பொருள், மகுடம் தாங்கிய மன்னன்முதல் மண்வெட்டி தூக்கும் கூலி வரையிலும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அலெக் சாண்டர் களத்திலே எதிரிகளோடு போராடினான்; அல்லாப்பிச்சை அலுவலகத்தில் காகிதங்கள் என்ற உதிரி களோடு போராடுகின்றான். அவரவர் வாய்ப்புக்குத் தகுந்தவாறு போராட்டம் அமைகின்றது.

''வாழ்வு'' என்ற தலைப்பை இக்கவிதைத் தொகுதியில் கண்டவுடன், கவிஞர் வாழ்வை மேற்போக்காகப் பார்த்தவாறு மனிதன் வாழ்ந்ததைப் பாடுகின்றாரா,

வாழ்வதைப் பாடுகின்றாரா அல்லது வாழப்போவதைப் பாடுகின்றாரா என்று நினைத்துப் படித்துப் பார்த்தேன். இவற்றுள் எதையும் பாடாது மனிதன் இன்னும் வாழவில்லை; 'மனிதன் எப்போது வாழ்கின்றானோ அப்போது அவனைப் பாடுவேன்' என்று பாடுகின்றார்.

''என்றைக்(கு)
ஏழ்மை வறுமை இடுகா(டு) ஏகுமோ
சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ
இலட்சிய வெறிகொண்(டு) இளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ
பழைய பொய்ம்மைகள் பயந்தோடிடுமோ
.... ..... .... ...... ......... ... ..... ......
... .... ....... ...... ..... .... .........
அன்றே
மனிதன் பிறக்கும்நாள்: மனிதன் வாழும்நாள்
அன்றே
மனிதனைப் பாடுவேன்! மனிதனைப் பாடுவேன்!''

என்று பாடும்போது 'நாம் வாழவில்லை' வாழ்வை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம். (We never live. we are always in the expectation of living) என்ற வால்டேரின் வாசகம் நினைவுக்கு வருகின்றது.

❖

''மூன்றும் ஆறும்'' என்று இத்தொகுதிக்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. 'மூன்று' என்ற எண் பற்றியும் 'ஆறு' என்ற பொருளில் ஓடுகின்ற - பாய்கின்ற ஆற்றைப் பற்றியும் பாடப்பட்ட இரு கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

மூன்றும் ஆறும்? ஒன்பது! இத்தொகுதியில் அடங்கியுள்ள கவிதைகளும் ஒன்பது. இப்படி இரு வகையிலும் தலைப்புப் பொருத்தமாயிருப்பது ஒரு புதுமையே!

இதில் உள்ள ஒன்பது கவிதைகளும் அவ்வப்போது கவியரங்குளில் பாடப்பட்டவை. இப்படி அரங்குகள் அமைத்துப் பாடுவதும் கேட்பதும் அண்மைக் காலத்திய நிகழ்ச்சி. காரைக்குடிக் கம்பன் விழாவிலிருந்து இந் நிகழ்ச்சி முக்கியத்துவம் அடைந்தது என்று எண்ணு கிறேன்.

கவிஞர்கள் தாமே வேட்கை காரணமாக எழுதுகின்ற கவிதைகளுக்கும், இக்கவியரங்குக் கவிதைகளுக்கும் வேறுபாடு இல்லாமலில்லை.

தம் வேட்கை காரணமாய் எழுதுகின்ற கவிதைகளிலுள்ள கவித்துவம், இலட்சியம் என்பனவற்றைக் கவியரங்குக் கவிதைகளில் அதிகம் காண்பதற்கில்லை. கூட்டத்தினரின் சுவைக்கேற்பவும், அவர்களை மகிழச் செய்வதற்காகவும் கவியரங்குகளில் கவிஞர்கள் பாடுகின்றார்கள். ஆகவே, சில குறைபாடுகள் காணப்படுதல் இயல்பே.

கவிஞர் மீரா கூட்டத்தினரின் சுவைக்கேற்பத் தம்மை முற்றிலும் அடிமைப்படுத்திக் கொள்ளாமல், தம்வழியில் அவர்களைத் திருப்ப முயல்வது வரவேற்கத்தக்கது.

❖

கவிதைக்குச் சிந்தனை தேவையில்லை; உணர்ச்சி போதும் என்று சிலர் சாதிக்கின்றார்கள். ''இல்லை. சிந்தனையே ஊற்று'' என்று சிலர் வாதிக்கின்றார்கள். புதிய கருத்துக்கள்

எவற்றையும் கூறாமல், தம் முன்னோர் சொன்ன கருத்துக் களையும் செய்யுட்களையும் எடுத்து வைத்துக்கொண்டு, அவற்றிற்கு அலங்கார வார்த்தைகளால் அழகாக முலாம் பூசிக் 'கவிதை' என்ற பெயரில் வெளியிடுவோரும் உளர். இதற்கு உணர்ச்சி மட்டும் இருந்தால் போதும்; சிந்தனை தேவையில்லை.

நமது கண்களுக்குச் சாதாரணமாகப் படும் பொருட்களை ஊடுருவிப் பார்த்து, அவற்றின் இரகசியத்தை அறிந்து சொற்களால் ஒரு வடிவம் கொடுத்துக் கவிதையாக வெளியிடுவோரும் உளர். இதற்குச் சிந்தனையும் தேவை; உணர்ச்சியும் தேவை. இத்தொகுதியைப் படிக்கும்போது கவிஞர் மீராவிடம் கவிதை எழுதுவதற்குரிய சிந்தனையும் உண்டு; உணர்ச்சியும் உண்டு எனத் தெரிகின்றது.

'மூன்று' என்ற எண்ணை அனைவரும் அறிவோம். ஆனால் தமிழில், தன் எண்ணிக்கையையே அளவாகக் கொண்டு - மூன்றே எழுத்துக்களைக் கொண்டு - அமைந்த எண் ''மூன்று ஒன்றுதான். இச்சிறப்பை மற்ற எண்கள் பெற்றில'' என்று கவிஞர் கூறும்போது அதில் அடங்கி யுள்ள இரகசியத்தை அறிந்து வியக்கின்றோம்.

''எண்களுக்குள் மூன்றுக்கே
எழுத்துக்களும் மூன்றாம்;
எண்களுள் - வேறெதுவுமந்த
எழுத்தால் அமைவதுண்டா?''

தமிழில் மூன்றுக்கு உள்ள இச்சிறப்பு ஆங்கிலத்தில் நான்கிற்கு (Four) உண்டு. செய்தி சிறியது; ஆனால் சிந்தனைக்குரியது. இப்படிப் பற்பல.

❖

''கற்பனை இல்லையென்றால் கவிதை இல்லை'' என்று கூறுகின்றார்கள். ஆனால், நின்று நிதானித்து நினைத்துப் பார்த்தால் கற்பனை இல்லாமலும் கவிதை இயங்க முடியும் என்று தோன்றுகின்றது. ஒன்றைக் கற்பனைக் கண் கொண்டு பார்க்கும்போது அதிலுள்ள இனிமை நம் இதயத்தைத் தொடுகின்றது என்பது உண்மைதான்.

கற்பனை இல்லாமலேயே தெளிந்த, தேர்ந்த சொற்களால் ஒரு பொருளின் உள்ள தன்மையை, உள்ளபடியே உள்ளங் கவரும் வண்ணம் சொல்ல முடியுமேயானால் அதுவும் கவிதைதான்.

''காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண் ஒவ்வேம் என்று''

என்னும் குறட்பாவில் கற்பனை உண்டு; இனிமையும் உண்டு.

''யான்நோக்கும் காலை நிலன்நோக்கும், நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்''

என்பதில் கற்பனை இல்லை; என்றாலும் சுவை உண்டு.

ஆகவே, கவிதையில் கற்பனை கலந்துதான் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்க முடியாது. கவிஞன் தன் ஆற்றலுக்கேற்ப எப்படியும் இயற்றலாம். அதில் சுவை இருக்கவேண்டும். அவ்வளவே.

இத்தொகுதியில் கற்பனைத்திறனைக் காட்டும் பகுதிகளும் உள. கற்பனை இல்லாமல் வாழ்வைப் படப்பிடிப்புச் செய்யும் பகுதிகளும் உள. கவிஞர், இரண்டையுமே நன்கு செய்திருக்கின்றார் என்று சொல்லலாம்.

'கிரேக்க மன்னன், சீலம் நதியில் மிகக் குறுகிய இடைவெளி உள்ள பகுதியை நள்ளிரவில் கடந்து, புருடோத்தமன் என்ற மன்னனை வென்றான்' என்பது வரலாறு. இந்நிகழ்ச்சியைக் கூறும்போது -

''சிந்து நதிப் பெண்ணின் இடை
சிறுத்த இடம் பார்த்திரவில்
வந்து வென்றான்''

என்று அந்நதியைப் பெண்ணாகவும், அதன் இடைவெளி குறுகிய பாகத்தை, அப்பெண்ணின் இடையாகவும் கவிஞர் கற்பனை செய்யும்போது, உவமை நம் உள்ளத்தைத் தொடுகின்றது.

இன்னொரு கவிதையில் பகல் வேடம் போட்டுத் திரியும் போலிப் பெரியார்களைப் பற்றி எழுதும்போது -

''ஒருவன்....-....
கோலா கலவிழாக் கூட்டத்திற்கு
வருகிறான்: தலைமை வகிக்கிறான்; புகழ்ந்தோர்
போட்ட பூ மாலையைப் போட்டுக் கொண்டே
பேச, வாய் திறக்கிறான்..... பேசவா செய்கிறான்?
'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்' என்ற வள்ளலார் வாசக
அருள்மழை பொழிகிறான்.... அடடா! 'தரணியில்
சமத்து வப்பயிரைத் தழைக்கச் செய்வோம்'
என்கிறான். இடையிடை ஏசுவைப் புத்தரை
காந்தியை இழுக்கிறான்; ஒரேகை தட்டல்''

என்கிறார். இதில் கற்பனை இல்லை. என்றாலும் படப்பிடிப்பு நம் பாராட்டைப் பெறுகின்றது.

கருத்தும் வடிவமும் மட்டும் கவிதையாகிவிட முடியாது. கவிஞனது ஆன்மாவின் குரல், அவன் எழுதும் கவிதையில் ஒலிக்கவேண்டும். இது கவிஞனது அனுபவத்தைப் பொறுத்து அமைகின்றது.

''வேடன், அம்பினால் பறவையை அடித்து வீழ்த்தியதை வான்மீகி கண்டார். இனம் தெரியாத துக்கம் அவர் இதயத்தை நிரப்பியது. அப்போது, அவர் சுலோகமும் பிறந்தது. அதைத்தான், சோகமே சுலோகமாயிற்று'' என்று வான்மீகியே கூறினார். கவிதை கற்பிக்கும் ஆன்மாவின் குரல் இதுதான்.

இக்குரலை, இக்கவிதைத் தொகுதியில் பல இடங் களில் கேட்கின்றோம். 'வீரம்' என்ற முதற் கவிதையில் ஒலிக்கும்

''சாவா? நாம் சந்திப்போம்;
வாழ்க்கை நமக்கென்ன
பூவா? புறப்படுவோம்
புல்லியரைத் தூள்செய்வோம்.'

என்ற குரலைக் கேட்டால் கோழையும் குதித்தெழுவான். கூனனும் நிமிர்ந்து நிற்பான். இல்லையா?

மற்ற கவிதைகள்.....?

நுனிக் கரும்பே இனிக்கின்றதென்றால் அடிக்கரும்பைக் கேட்கவா வேண்டும்?.

**நா. இலக்குமணப்பெருமாள்**

தமிழ் வளர்ச்சிக் கழகம்
பரிசு பெற்ற நூல்

*''நலம் பாடிப் பாய்ந்துவரும்*
*நதியை என் மெய்ந்நாவால்*
*நன்மைக் கெதிரான*
*சதியைக் கொடும்பகையைச்*
*சாய்த்தொழித்துச் சமூகத்தின்*
*வறட்சி நிலைமாற்றி*
*வாழ்வில் புத்துணர்வூட்டும்*
*புரட்சிக் கவிஞரெனப்*
*புகழ்வேன் நான்.........''* *(ஆறு)*

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
அவர்கட்கு
இந்நூல் காணிக்கை

# வீரம்

*தலைவர் : கவிஞர் முடியரசன்*

*இடம் : சிவகங்கை வள்ளுவர்*

*இலக்கியப் பேரவை -*

*தொடக்க விழா*

*நாள் : 29 - 4 - 1962*

*பொதுத்தலைப்பு : சுவைகள்*

# வீரம்

❖

சித்திரையின் மாலைச்
சிறுபொழுதில் வள்ளுவர் பேர்
முத்திரையைப் பெற்றிங்கே
முகிழ்த்துள்ள பேரவையின்
கவியரங்கில், ஏறியென்
கம்பீரக் குரல்காட்டப்
புவியரங்கில் வாடிப்
புலம்பியவன் வந்துள்ளேன்.
என்னே என் வீரம்.....!
எழுச்சிக் கவியிசைக்கும்
முன்னே கரங்கூப்பி
முத்தமிழை வணங்குகிறேன்.
வெண்மதியை வானை
விரிகடலைக் காவிரிக்கும்
பெண்நதியைத் தொழுதுகவிப்
பிச்சைநான் கேட்கின்றேன்.

முடியரசில் ஓங்கி
வளர்ந்த மொழிக்கின்று
குடியரசில் ஏற்பட்ட
குறைகளையப் புறப்பட்ட

முடியரசே! † வீர
முரசரசே! காரைக்
குடியரசே! காவியப்பூங்
கொடியரசே! வணங்குகிறேன்.

கூரான அரம்போலக்
குழந்தைகளின் மதிசிறக்க
நேரான வழியிலவர்
நெஞ்சிருக்கப் பாடுபட்டு
வேராய் விளங்கி
விழுதுகளைப் படரவிட்ட
நாரா யணனாரே★
நல்லாரே! வணங்குகிறேன்.

பாட்டாழிக் குள்மூழ்கிப்
பளபளக்கும் முத்தளிக்கும்
கூட்டாளிக் கவிஞர்களே,
குறளாசான் சீடர்களே,
பால்கொடுக்கும் சுவையும்
பழங்கொடுக்கும் சுவையுமொரு
நூல்கொடுக்கும் சுவையாமோ
நுகர்தற்கே என்றெண்ணி
வந்துள்ள அன்பர்களே!
வணங்குகிறேன்; எனக்கிங்கே
தந்துள்ள வீரத்தைத்
தாங்க முயல்கிறேன்!

---

† கவியரங்கத்தலைவர் - முடியரசன்

★ விழாத்தலைவர் - அரசர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் இரா. நாராயணன் சேர்வை.

குருதிக்கும் நிலத்திற்கும்
கூட்டுறவை உண்டாக்கும்
சரிதப் புகழ் 'வீரம்'
சாற்றிடநான் தக்கவனோ;
மருது[†] பிறந்த இந்த
மண் பிறந்தேன் என்னும்
விருதுதனைப் பெற்றதனால்
வீரத்தைப் பெற்றேனோ?

கங்கை நதி கொண்டு
கடாரத்தைக் கைக்கொண்டு
வெங்களத்தில் பொழுதெல்லாம்
விளையாடிக் கொண்டிருந்த
சோழன் திருப்பெயரைச்
சொந்தமெனக் கொண்டதனால்
வேழம் நடுங்கவைக்கும்
வீரத்தைப் பெற்றேனோ?

ஆசை வைத்த இதயத்தின்
அதிபதிநான் ஆண்சின்ன
மீசைவைத் துள்ள
மிகப்பெரிய காரணத்தால்
வீரத்தைப் பெற்றேனோ?
விந்தைதான்.....! இந்நாளில்
தீரம் இழந்த
திருநாட்டைப் பாருங்கள்
முந்தி - உங்கள் புகழ், வானை
முட்டிச் சிரித்ததையும்

---

[†] மருதுபாண்டியர் ஆண்ட சிவகங்கை

சிந்தியுங்கள்! வடவரசர்
சிரத்தில் சுமந்துவந்த
கல்இருந்தா லேனும்
கதைகூறும்; சேரன்கை
வில் இருந்தாலேனும்
வெற்றிச் செயல் கூறும்.
புறப்பாட்டை ஒவ்வொன்றாய்ப்
புரட்டுங்கள்; மானத்தின்
மறக்கோட்டை கொத்தளங்கள்
வானுயரக் காண்பீர்கள்!
'தாய்நாட்டைக் காக்க உயிர்த்
தன்மானம் தனைக்காக்கப்
போய் வருவேன்' என முழங்கிப்
போர்முனைக்குப் புறப்பட்ட
அத்தானை அனுப்பிப், பின்
அவன் - தானை பலவென்று
செத்தான் எனுமிழவுச்
செய்தித்தீ செவிப்பாய்ந்தும்
சிந்தை நடுங்காத
வீரத் திருமகளிர்
எந்தையர்தம் நாட்டில்தான்
எத்தனைபேர்! எத்தனைபேர்!

ஆமாம் அறிவுடையீர்!
அந்நாளில் மறவனுக்கே
பூமாலை சூட்டிஇளம்
பூவையர்கள் மணங்கொள்வார்.
புலிப்பல்லைப்போய்க் கொணர்ந்து
போர்வீரர் தாலிசெய்து

கிளிப்பிள்ளை போல்பேசிக்
கிறுகிறுக்க வைக்கின்ற
மாதர் கழுத்தினிலே
மங்கலமாய்த் தங்கவிட்டார்.

காதல், தோள்வீரத்தைக்
கரும்புமணம் புரிந்தகதை
ஏட்டில்தான் பார்க்கின்றோம்;
படிக்கின்றோம்; என்செய்வோம்?
நாட்டின் நிலைவேறாய்
நாமிருக்கப் பார்க்கின்றோம்!
தொல்லை மிகக்கொடுத்துத்
தொட்டிலில்போட் டாட்டென்றே
பிள்ளை அடம்பிடிக்கப்
பெற்றெடுத்த தாய்மார்கள்
பேயென்றும் பிசாசென்றும்
பெரிதும் பயமுறுத்தின்
நாயென்றால் கூடப்பின்
நடுங்காதோ, கூறுங்கள்!

சீவி முடித்துத்தன்
சின்னஞ் சிறுமகனை,
'ஆவி கொடுத்திடநீ'
அமர்க்களம்போய் வா, வென்ற
பெண்ணெங்கே போய்மறைந்தாள்?
பிறந்திங்கே மறுபடியும்
கண்முன்னே வந்தாலும்
கால்கொள்ளும் மாவீரம்.

தாய்க்குலமே! உன்பதுமத்
தாள்பணிந்தேன்; உன்வளர்ப்பில்
வாய்த்திருக்க வேண்டுமினி
வளமான புதுவீரம்
கண்ணகியின் வழிவழியாய்க்
கற்புத் திறன்காணும்
பெண்இனமே! என்னினத்தின்
பெருமையெல்லாம் உன்னிடத்தில்!
மீனக் கொடியோன்
வியன் நகரில் புதுவாழ்வைக்
காணக் கருதியொரு
காற்சிலம்பை விற்றுவரப்
போனான், வருவான்
பொழுது புலருமெனத்
தேனை நினைவோடு
தேக்கிக் கொண்டிருந்த மகள்
குடிகெடுத்த அவலத்தைக்
கூறிடக் கேட்டதுமே
கடுகடுக்கும் முகத்தோடும்
கனல்தெறிக்கும் கண்ணோடும்
படபடக்கும் நெஞ்சோடும்
பதைபதைக்கும் மூச்சோடும்
இடிஇடிக்கும் புயல்மேகம்
எழுந்ததைப்போல் அண்டங்
கிடுகிடுக்க வந்தாள்; மெய்க்
கீர்த்திமிக்க பாண்டியனைத்
துடிதுடிக்க வைத்தாள்;
துணைவன் பழிதுடைத்தாள்!

இவளன்றோ வீரமகள்!
இவளன்றோ புரட்சிப்பெண்!
இவளன்றோ இளங்கோவை
இயக்கிவைத்த பெண்தெய்வம்!

பெண்ணுக்குக் கற்பும்
பிழையறியாச் சான்றோர்க்குக்
கண்ணுக் கிணையாய்க்
கருதும்தன் மானமும்தான்
வீரம் என் கின்ற
விதிவகுத்தும் திணைவகுத்தும்
யாரும் வியக்கும்
இலக்கணங்கள் செய்தவர்யார்?

மறம் என்ற மங்கை
மடியில் துயிலுமோர்
அறம்என்ற அருட்குழவிக்(கு)
ஆராரோ இசைத்தவர் யார்?
மரத்தின் புறமிருந்து
மாவீரன் ஒருவன்மேல்
கரத்தின் கணையெறிவோன்
கடவுளே என்றாலும்
கண்டிக்கத் தவறிப்போய்க்
காலட்சேபம் செய்தால்
வெண்டைக்காய் வெட்டுவதும்
வீரம்என் றாகிவிடும்
பின்னர் நமதினத்தின்
பீடு பறந்துவிடும்

முன்னர் செழித்திருந்த
முறையாவும் பட்டுவிடும்;

செயங்கொண்டான் சந்ததியைச்
சேர்ந்தவனா இன்றைக்குப்
பயங்கொண்டான் என்றுலகம்
ஆச்சரியப் படக்கூடும்

உண்மை! இஃதுண்மை!
உயிரனையீர்! உள்ளத்தில்
திண்மை இருந்தால்தான்
வெற்றிச்சுடர் தெரியும்

'சாவா? நாம் சந்திப்போம்
வாழ்க்கை நமக்கென்ன
பூவா? புறப்படுவோம்;
புல்லியரைத் தூள் செய்வோம்!
நிலம் திருடும் இழிகுணத்தான்
நீயா? ஆ! எங்கள்
பலம் திருடப் பார்த்த
பகையா? வா', என்றார்த்து
வெள்ளையர் தம் ஆதிக்க
வேகத்துக் கணைபோட்ட
உள்ளம் நமக்கிருந்தால்
உயர்வோம்; ஆம்! இஃதுண்மை!

நாவீரத் தாசர்களாய்
நாம் மாறிப் போகாமல்,
தீவீரம் பேசிப்பின்

திசைமாறித் திரியாமல்
சாதி மதப்பூசல்
சகதியிலே வீழாமல்
மோதித் தினம்பேதம்
முக்கோடி வளர்க்காமல்
ஒன்றுபட்டுச் செல்வோம்
உலகப் பிறப்போடு
தொன்று தொட்டு வருகின்ற
தூய தமிழை
அழிக்க வரும்பகையை
அழிப்போம்; இருளைக்
கிழிக்கும் கதிராய்க்
கிளர்ந்து!

❖

# கருப்பு

தலைவர் : கவிஞர் முடியரசன்

இடம்: மதுரை எழுத்தாளர்

மன்றம் - நான்காம்

ஆண்டு விழா

நாள்: 22 - 7 - 1962

பொதுத் தலைப்பு: வண்ணங்கள்

# கறுப்பு

❖

கறுப்புநிற மீசையினை வேங்கை மார்பன்
கரிகாலன் போல்வைத்தாய்; ஞானச் செல்வம்
திருக்குறளை இதயத்தில் வைத்தாய்; தூய
தேனகையைக் கனிமொழியை இதழில் வைத்தாய்;
அரிமாவின் வீரத்தைத் தன்மா னத்தை
அப்படியே உன்விழியில் வைத்தாய்; பச்சை
மருக்கொழுந்துத் தமிழை உன் உயிரில் வைத்தாய்;
மணிக்கவிதை முடியரசே! வணங்கு கின்றேன்.

மரை[†]ச்சாமி மலைச்சாமி தன்னு டம்பில்
மங்கைக்கோர் இடம்தந்த சாமி ஆற்றங்
கரைச்சாமி சேலைகவர் கண்ணன்சாமி
கையினிலே வாள்பிடித்த சாமி இன்னும்
தரைச்சாமி எவ்வளவோ இருந்தும் நானோ
தமிழ்ச்சாமி என்றால் தான் வணக்கம் செய்வேன்!
துரைசாமி[†] என்சாமி! இந்நூற் றாண்டின்
தொல்காப்பி யச்சாமி! வணங்கு கின்றேன்.

---

[†] மரை - தாமரை என்பதன் முதற்குறை

[★] மன்றத்தலைவர் - உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி

வண்ணங்கள் தொட்டெழுதி ஓவி யங்கள்
வரையவந்த தூவிகளே! இங்கர் சால்போல்
எண்ணங்கள் ஈட்டிகளாய்த் தீட்டி நீட்டும்
எழுத்தாளப் பாசறையே! நீதி காத்த
மண், எங்கள் மண் என்று பெருமை பேசும்
மாமதுரைச் சான்றோரே! வணங்கு கின்றேன்.
வண்ணத்துள் வண்ணமெனத் திகழ்க றுப்பு
வண்ணத்தைப் பாட்டாக்கி வழங்கு கின்றேன்.

கறுப்புநிறம் வண்டுநிறம்; எனினும் வண்டைக்
கவின் மலர்கள் காதலிக்கா திருப்ப துண்டா?
கறுப்புநிறம் காக்கைநிறம்; எனினும் அந்தக்
காக்கையின வாழ்க்கைக்கோர் ஈடு உண்டா?
கறுப்புநிறம் தான்களிறும்; எனினும் அந்தக்
களிறுதரும் தந்தத்திற் கிணையும் உண்டா?
கறுப்புநிறம் என்றால்பின் தேவை யற்ற
கசப்பெதற்கு? வெறுப்பெதற்கு? விளங்க வில்லை.

கறுப்புத்தான் கார்மேகம்: அந்த மேகக்
காணிக்கைத் தண்ணீரை மறுக்கின் றோமா?
கறுப்புத்தான் குயில்; கூவு கின்ற போது
காதுக்குக் கைக்கதவா போடு கின்றோம்?
கறுப்புத்தான் கடல் கூட: ஆனால் அந்தக்
கடல் முத்தைச் சொத்தையென்றா வீசு கின்றோம்?
கறுப்புத்தான் ஏருழவர் மேனி, அந்தக்
காராளர் கைவிட்டால் செந்நெல் ஏது?

மான்வேண்டும் எனப்பெண்மான் கேட்க, மாய
மான் பின்னால் போனானே - அந்த ராமன்
தான் என்ன நிறமென்று நினைக்கின் றீர்கள்?
தார் போன்ற கறுப்புநிறம்! அந்தோ னிக்குத்
தேன்போல இனித்தாளே எகிப்து தேசத்
திருமங்கை† அவள் நல்ல கறுப்புத் தானே!
தான் தோன்றித் தலைவர்முன் எதிர்ப்பைக் காட்டத்
தயங்காமல் காட்டுங் கொடி கறுப்புத் தானே!

செகம்புகழும் நாடகங்கள் செய்துதந்த
செகப்பிரியன் மிகப்பிரியம் வைக்கும் வண்ணம்
அகம்பறித்த காதலியின் வண்ணம் கூட
அழகான கறுப்புத்தான்! எனவே வெற்றி
முகங்காட்ட வேண்டுமென்று விரும்பு கின்ற
முன்னேற்ற எழுத்தாள ரெல்லாம் இன்றே
தகதகக்கும் கறுப்புநிறப் பெண் கழுத்தில்
தாலிகட்டிப் புகழ்தட்டிக் கொள்ள வேண்டும்.

மதுமதிபோல் முகங்கொண்ட மங்கை அந்தி
மாலையிலே சோலையிலே நடக்கும் போது
மதுஉண்டு மண்கிடந்த வண்டை நாவல்
மரம் உதிர்த்த பழம்என்று நினைத்துக் கையால்
அதிவேக மாய் எடுத்தாள்; உற்றுப் பார்த்தாள்;
அரைநொடியில் பறந்துவண்டு செல்லக் கண்டே
அதிசயித்தாள்; பழம் பறப்ப துண்டா என்றே
அவள் மயங்கச் செய்ததெது? கறுப்பு வண்ணம்★

---

† எகிப்து தேசத் திருமங்கை - அந்தோனி (Antony)யின் காதற் கிளி கிளியோ பாத்ரா (Cleopatra)

★ இப்பகுதி ஒருபழம் பாடற் கருத்தைத் தழுவியது

எத்திக்கும் புகழ்மணக்கும் இலக்கி யங்கள்
ஏராள மாய்த்தந்த தமிழை மேலும்
தித்திக்க வைத்திருந்த ஔவை யாரைத்
திடமாக நெடுங்காலம் வாழும் வண்ணம்
வைத்ததெது? கொடையழகன் தகடூர் வேந்தன்
வழங்கியது....! மூதாட்டி ஔவை† அன்று
கத்தியெடுத் தறுக்காமல் உண்ட அந்தக்
கனிவண்ணம் என்ன வண்ணம்? கறுப்பு வண்ணம்.

முற்றாத மாந்தளிரன் உடலும் வண்டு
மொய்க்காத முல்லைப்பூப் பல்லும் கொண்ட
குற்றாலக் குறவஞ்சி பிரிவால் வெந்த
குறவன்தன் காதலியின் அடையாளத்தைச்
சுற்றாமல் வளைக்காமல் நண்பனுக்குச்
சுருக்கமாய்ச் சொன்னானாம்; என்ன சொன்னான்?
கற்றாரைப் போலெங்கும் திரியும் வஞ்சி
'கறுப்பினிலே அழகி' என்றான்; கம்பன் தோற்றான்.★

---

† ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியால் கொடுக்கப்பட்ட கருநெல்லிக் கனியையுண்டு நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். (புறம் - 91)

★ இராமன், அனுமனிடம் சீதையின் அங்க அடையாளங்களைப் பாதாதி கேச முறையிற் கூறுவதாகக் கம்பன் பாடிய பாடல்கள் பல. அவ்வாறன்றிக் குறவஞ்சியின் அடையாளத்தைக் குறவன் ''கறுப்பில் அழகியடா'' என்று தன் தோழனுக்குச் சுருக்கிச் சொல்வதாகப் பாடிவிடுகிறான், திரிகூட ராசப்பன் - குற்றாலக் குறவஞ்சியில். எனவே கம்பன் தோற்றான்!

'இருமோகக் கருநாகம் புணர்ந்து பின்னி
இணைவதுபோல் தெரிகின்ற உன்றன் கூந்தல்
திருக்கோலம் என்னென்பேன் கண்ணே' என்று
தினம் ஆண்கள் பெண் துணையைப் புகழுவார்கள்;
அருகிருந்து கூந்தலினைக் கோது வார்கள்;
அது - கறுப்பே என்பதனால்! மாறி வெள்ளை
உருவெடுத்து விடுமானால் பின்னர் தேடி
ஒரு பயல்தான் வருவானா? வருணிப் பானா?

மலர்வண்ணம் பலவண்ண மானால் என்ன?
மர இலைகள் பச்சைநிற மானால் என்ன?
சிலர்வண்ணம் சிவப்பாக இருந்தால் என்ன?
சிந்தனைகள் அழுக்கடைந்த கார ணத்தால்
''புலையர்கள் கறுப்பர்கள்'' என்று தீமை
புரிகின்றோர் நிறம்வெள்ளை யானால் என்ன?
உலகத்தில் நிழல்வண்ணம் எதற்கும் யார்க்கும்
ஒன்றன்றோ! உண்மையிலே கறுப்பே யன்றோ?

பச்சைநிறச்[†] சேலையினைக் கட்டிக் கோவைப்
பழச்சிவப்பாம் இதழில் நகை காட்டி, நெஞ்சில்
நிச்சயித்த எதிர்கால மனைவி வந்தாள்
நேற்றிரவு.... கனவில்தான்....! வந்தே ''அத்தான்
கொச்சிமஞ்சள் பூசியுள்ள முகம்விளக்கங்
கொள்ளப் பொட்டிடுக'' வென்றாள். கறுப்புப் பொட்டைக்
கச்சிதமாய் இட்டேன் நான். அதனைக் கண்டு
கண்டுவந்து கவிபொழிந்தேன்; வரட்டுமா, நான்?

❖

[†] இவை பிற கவிஞர்களால் பாடப்பட்ட வண்ணங்கள்

# மருதம்

தலைவர் : கவிஞர் முடியரசன்

இடம்: விருதுநகர் செந்தில்
குமார் கல்லூரி
தமிழ்க் கலைவிழா

நாள்: 19 - 2 - 1963

பொது தலைப்பு: திணைகள்

# மருதம்

❖

*அல்லிப்பூ மணங்கமழும்*
*அந்திப் பொழுதினிலே*
*கல்விப்பூ மணங்கமழும்*
*கல்லூரி மண்டபத்தில்*
*கவிதை அரங்கமைத்த*
*கலை உணர்வைப்*
*போற்றுகிறேன்.*
*செவியின்பம் தேடிவந்த*
*செல்வர்களை வணங்குகிறேன்.*

*இல்லத் தரசியார்*
*''இன்னொருத்தி யார?'' என்று*
*சொல்லித்தான் ஊடத்*[†]
*தொடங்குகின்ற வேளையிலும்*
*கவிதை அழகியிடம்*
*காணும்பே ரின்பச்*
*சுவைவிலக்கா முடியரசே!*
*சொல்லரசே! வணங்குகிறேன்.*

---

[†] ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்தின் உரிப்பொருள்.

மருதுநகர் †வாழுமெனை
மருதம் புகல்என்று
விருதுநகர் அழைத்தீர்கள்;
விந்தையினை என்னென்பேன்!
தஞ்சை நகர்ப்பிறந்த
தமிழர் எவரேனும்
நஞ்சை வளங்கொழிக்கும்
நல்ல மருதத்தைப்
பாடிப் பசுந்தேனைப்
பாய்ச்சுதற்கு வந்திருந்தால்
கூடியதைக் கேட்பதிலே
கொள்ளைப் பொருளிருக்கும்.

கொடிக்கம்பம் தவிர, பயிர்க்
குலம் அதிகம் நட்டுவைக்க
முடியாத சீமையிலே
முகிழ்த்த எனை அழைத்து
மருதத்தைப் பாடென்றால்
மயக்கம் தோன் றாதா?
பெரிதாக அச்சம்
பிறக்காதா? ஆனாலும்
காலைவைத் தால், வெங்
கனலாய்க் கொதிக்கின்ற
பாலைத் திணையளித்துப்
பதை பதைக்க வைக்காமல்

---

† மருதுபாண்டியர் ஆண்ட சிவகங்கை.

மருதம் அளித்தமைக்கு
மகிழ்ச்சி அடைகின்றேன்
ஒருவா(று) அதன் பெருமை
உரைக்கத் தொடங்குகிறேன்.

திணைகள் ஐந்(து) உண்டென்று
தெரிந்திட்ட போதும், உயர்
திணை என்றும் மருதம்தான்!
மற்றதெல்லாம் அஃறிணை தான்.

வெள்ளி நிறங்காட்டி
விரைவாக மான்போலத்
துள்ளிக் குதிக்கின்ற
தூய அருவியின் நீர்
உற்பத்தி யாகுமிடம்
உயர்குறிஞ்சி யென்றாலும்
அற்புதமாய் அதுபாய்ந்தே
அசையுமிடம் மருதம் தான்!

முல்லை நிலப்பெண்கள்
மோர்விற்க நெய்விற்கச்
செல்லும் சிறந்த இடம்
செழிப்பான மருதம்தான்!
நித்தம்மீன் பிடித்துவந்து
நெய்தற் பரதவர்கள்
சத்தமிட்டு விற்கின்ற
சந்தை மருதம் தான்!
பாவம்! பரிதாபம்!
பாலையிலே வாழ்வோர்கள்

தேவையினால் களவாடத்
திரியுமிடம் மருதம்தான்!
எந்தத் திணையாக
இருந்தாலும் மருதத்தைச்
சந்திக்க விரும்பாமல்
தனித்தியங்க முடியாது.

மிஞ்சி ஒலிக்க
மெதுவாய் நடந்துவந்து
'கஞ்சி குடிக்களன்றன்
காதலரே வாரும்; என
அன்னம் அழைக்குங்கால்
அகிலம் முழுவதற்கும்
அன்னம் அளிக்க
அயராத ஏருழவன்
''அந்த அமுதம் இங்(கு)
ஆருக்கு வேண்டுமடி
இந்த அமுதம்
இருக்கையிலே'' என்றுரைத்துத்
தொட்டு விளையாடித்
தோகை மயிலாளைக்
கட்டிப் பிடிக்கின்ற
காட்சி நிகழுமிடம்
நெல் விளையும் மருத
நிலம் தானே! பின் என்ன
புல்விளையாப் பாலையிலா
பொங்கிவரும் புதுக்காதல்?

உண்மையைப்போல் அழகாய்
ஒளிரும் முகம்படைத்த

பெண் மக்கள், பரிதி
பிறக்கும்முன் விழித்தெழுந்து
குளித்துத் திருநுதலில்
குங்குமப் பொட்டிட்டுக்
களித்துமனை முற்றத்தில்
கவின்பானை ஏற்றியதில்
முனைமுரியா திருக்கின்ற
முல்லைநிற அரிசியிட்டு
இனியவெல்லக் கட்டியிட்டுப்
பாற்பொங்கல் ஆக்கி வைக்கப்
பல்லில்லாக் கிழவர் முதல்
பால்மறவாப் பிள்ளைவரை
எல்லாரும் கூடி
இதயச் செழுமையுடன்
சூரியனைப் போற்றிச்
சுழல் உலகம் வாழவைக்கும்
மாரியினைப் போற்றி
மறக்காமல் கம்பனைப்போல்
ஏர்போற்றி† நன்றியுள்ள
எருது களைப்போற்றிப்
பார்போற்றிப் பாடுபடும்
பயன்கரத்தை மிகப்போற்றிக்
கொண்டாடும் தைத்திருநாள்
கொடுத்த நிலங்கூட
வண்டாடிப் பண்பாடும்
வனப்புள்ள மருதம்தான்!

---

† கம்பன், உழவுக்குத் தந்த கவிதைக் காணிக்கை ''ஏர் எழுபது''

ஊடல்என் கின்ற
உரிப்பொருளுக் கேற்றதமிழ்ப்
பாடல் பிறந்ததிணை
பாங்கான மருதம்தான்.
கோவலன்வாழ் வழிந்ததற்கும்
கூடல் நகராண்ட
காவலன், சா வேற்றதற்கும்
கண்ணகிப்பெண் வானுறையும்
தெய்வநிலை பெற்றதற்கும்
தென்னர் மறம் பழித்த
செய்கை அறிந்தவுடன்
சீறி விழிசிவந்து
படைதிரட்டிப் புகழ்ச்சேரன்
பாய்ந்ததற்கும் வடவேந்தர்
மடமையினால் கல்சுமந்து
மானம் இழந்ததற்கும்
காரணமாய்க் கற்றோர்கள்
காண்பதெது? மாதவியாம்
ஆரணங்(கு) இசைத்திட்ட
அழகான கானல்
வரிப்பாடல்† தானே;
வளமான மருதத்தின்
உரிப்பொருளாய் அமைந்ததொரு
ஊடற் கதைதானே!

† "மாதவிமடந்தை - கானற் பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது, - சிலப்பதிகாரம்.

மாலையிலே காதல்
மயக்கம் தலைக்கேறச்
சோலையிலே தனியாகச்
சுந்தரியாள் ஒருத்திமட்டும்
உட்கார்ந் திருந்தாள்;
உளத்தினிலே ஏக்கமென்ற
முட்பாய, இன்னுமவன்
முகங்காட்ட வில்லையென்ற
ஆத்திரமோ அதிகரிக்க
ஆசை சிறகடிக்க
நேத்திரமீன் அங்குமிங்கும்
நெளிந்தோடிக் கொண்டிருக்கப்
பொற்கொல்லர் இன்றைக்குப்†
புலம்பித் தவிப்பதைப் போல்
நெற்செல்வன் வீட்டுப்பெண்
நிலையின்றித் தவிதவித்தாள்.
எப்படியோ - வெண்திங்கள்,
எழில்மிக்க மணிசிரிக்கும்
ஒப்படிசெய் யாதுள்ள
ஒளிவயலைக் காவல்செய
வருகின்ற நேரத்தில் -
வந்த இளங்குமரன்
இருகரத்தால் பூமயிலை
இறுக அணைப்பதற்குப்
போனான்; அவள் விலகிப்
போனாள். தினம்கொம்புத்
தேனாகப் பேசியுடல்

---

† தங்கக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டநேரம்.

தீண்டுபவள் இன்றுமட்டும்
ஊமைக் குயிலானாள்
ஏன், என் றுளஞ்சோர்ந்து
''தீமை எதுபுரிந்தேன்?
திரும்பிப்பார்! பிளந்திருக்கும்
மாவடுவைப் போன்ற
மணிவிழியே! இதயத்தில்
மாவடுவை உண்டாக்கி
மாய்க்காதே'' எனக்கூறி
நெருங்கி அமர்ந்தான்;
நிலாமுகத்தை முத்தமிட
வரங்கேட்டான்; உடனே
வனிதை அவன்மார்பில்
ஓங்கித் தன் பாதத்தால்
உதைத்தாள்! நொடிப்பொழுதில்
வேங்கை தனைவெல்லும்
வீரன்தன் மலைமார்பில்
பூப்பாதம் படுமானால்
புண்ணாகிப் போமென்று
காப்பாற்ற நினைத்துக்
கரத்தால் புதைத்துநிற்க,

''ஓஓஓ'' அப்படியா.....
உன் கள்ளம் அறிவேன்நான்
நீ ஓர் புதியவளை
நெஞ்சில்வைத் திருக்கின்றாய்
அவளுக்கு நல்ல
அடிபட்டு விடும்என்ற
கவலையினால் தானே
கரம்புதைத்தாய்! 'எனச்சொல்லி

ஊடல் மிகக்கொண்டாள்;
ஒதுங்கி அவள் சென்றாள்;
பாடல் மருதத்தைப்
படம் பிடித்துக் காட்டி நின்றான்†

கூடிக் களிக்குமுன்
குலமகளும் தலைமகனும்
ஊடிக் களிப்பதுதான்
உகந்ததென நம் நாட்டுப்
புலவர் மொழிந்தார்; முப்
பாலாரும் உப்பைப்போல்
புலவிகொஞ்சம் வேண்டுமெனப்
புகன்றார்★; இந்நாளில்
பலர் 'வாழ்வில் உப்பில்லாப்
பண்டத்தை உண்பதைப்போல்
சலித்திருக்கப் பார்க்கின்றோம்'
சரியான ஊடல் இல்லை!

'ஏதோ மனைவியென்ற
எண்ணத்தால் மணவாளன்'
'மாதே! என அழைத்த
மாத்திரத்தில் நொடிக்குநொடி
கூப்பிட்டுக் கொஞ்சுவதில்
குறைவில்லை என்கையில்
காப்புண்டா? வளையுண்டா

---

† இக்காட்சி கம்பன் கவிதையொன்றின் தழுவல்

★ ...உப்பு அமைந்து அற்றால் புலவி; அது சிறிது
மிக்குஅற்றால் நீள விடல்.... - குறள் (1302)

கழுத்தினிலே தங்க
நகையுண்டா? நட்டுண்டா?
மாற்றி உடுத்த
வகையான சேலைதான்
வாங்கிக் கொடுத்ததுண்டா?
எதிர்வீட்டுப் பார்வதிபோல்
இருளப்பன் மனைவியைப்போல்
புதிதாய் வரும் படத்தைப்
போய்ப்பார்க்க வழியுண்டா?
கல்யாண நாள்முதலாய்க்
கடுகளவும் சுகம் உண்டா?
சொல்லுங்கள் எனமங்கை
சோகக் கதை தொடர்ந்தால்
'ஆர்வத்தோ டழைத்தேன் நான்
ஆபத்தாய் முடிந்ததெனச்
சோர்வை அவன் பெற்றுச்
சுடுமூச்சை விடக்கூடும்'

இதுதான் நம் நாட்டில்,
பலர் வீட்டில் இன்றைக்குப்
பொதுவாகக் காணுகின்ற
பொல்லாத புதுஊடல்

விருந்தினர்கள் வந்தால்
விரைவாக ஊடல்
பறந்தோடிப் போய்விடுமாம்
பழம் நாளில்! இந்நாளில்

விருந்தினர்கள் வந்தால்
வெகுளியுடன் கொடும்ஊடல்
பிறந்து வந்து பயமுறுத்தும்
பெரிதும் துயர்ப்படுத்தும்;

இலக்கியத்தில் இருக்கின்ற
இனிதான ஊடலினை
விலக்கி வைத்து விடலாமா
மருதம் கெடலாமா?

குறிஞ்சிக் கவிபாடிக்
கொண்டிருந்த கபிலரும்தான்
நெருஞ்சியென மருதத்தை
நினைத்தாரா? வெறுத்தாரா?
பரணன் நக்கீரன் 'தென்
பாண்டிப் பதிவாழ்ந்த
மருதன் இளநாகன்
மன்னன்கோப் பெருஞ்சோழன்,
இடையன் நெடுங்கீரன்
மதுரை இளவேட்டன்
கடுவன் இளமள்ளன்,
ஆலங் குடிவங்கன்
அள்ளூர் நன்முல்லை,
அதியன் புகழ்ஔவை
கள்மயக்கம் நடையழகில்
காட்டும் இளங்கடுங்கோ
இன்னும் பலபுலவர்'
இனிக்க இயற்றிவைத்த
மன்னும் கடைச்சங்க
மருதப்பா படிக்குங்கால்

'பிள்ளைக் கனியமுதைப்
பேசும்பொற் சித்திரத்தை'
அள்ளி அணைத்ததைப் போல்
ஆனந்தம் தோன்றாதா?

நளனுக்கும் தமயந்தி
நங்கைக்கும் மெய்க்காதற்
களனமைத்துக் கொடுப்பதற்குக்
கனிவாகத் தூதுசென்ற
அன்னம் என்கின்ற
அறிவான பறவையினம்
முன்னம் இருந்த இடம்
முழவொலிக்கும் மருதம்தான்!
பள்ளு வகைநூல்கள்
பல தோன்றக் காரணமாய்
உள்ள இடம் இந்த
உயர்வான மருதம்தான்

ஏட்டில் எழுதாமல்
இதயத்தில் எழுதி வைத்த
நாட்டுப் பாடல் கேட்க
நாடுமிடம் மருதம்தான்!

பூவிற் சிறந்ததெனப்
போற்றும் கமலப்பூ
வாவி நிறைந்த இடம்
வாசம் கமழுமிடம்
செல்வம் கொழிக்குமிடம்
செந்தமிழும் செழிக்குமிடம்

பல்கிப் பலகலைகள்
பரவித் தழைக்குமிடம்
நீரும்பே ராறும்
நிலையாகச் சூழ்ந்த இடம்
யாரும் விரும்புமிடம்
என்றைக்கும் மருதம்தான்!

❖

# விஞ்ஞானி

*தலைவர்: கவிஞர் கண்ணதாசன்*

*இடம்: ஆத்தூர்த் தமிழ்ச் சங்கம் - முத்தமிழ் விழா*

*நாள்: 26 - 5 - 1963*

*பொதுத்தலைப்பு: வாகை சூடுவோம்*

# விஞ்ஞானி

❖

தின்னத் திகட்டாத
தேமாங் கனி, மங்கை
கன்னம்போல மினுமினுத்துக்
காட்சிதரும் வைகாசித்
திங்களிலே - அறவாழி
திரு.வி.க, அரங்கினிலே
பொங்கும் சுவையளிக்கும்
புதுமைக் கவியரங்கம்
அமைத்துப் பணியாற்றும்
ஆத்தூர்த் தமிழ்ச்சங்கம்
இமயம்போல் என்றும்
இருக்கவென வாழ்த்துகிறேன்.

மன்றத் தமிழ்பாடி
மணங்கமழும் தண்பொதிகைத்
தென்றல்† நலம்பாடித்
திரைவானில் பறந்தபடி
கானம்பா டித்தேமாங்
கனி★ பாடித் தென்னகத்தின்

---

† தென்றல் கவியரங்கத்தலைவர் கண்ணதாசன் நடத்திய கிழமை இதழ்.

★ மாங்கனி - கண்ணதாசன் பாடிய காவியம்.

மானம்பா டித்தமிழ
மரபின் நெடுமாட்சி
வானம்பா டிப்புதிய
வாழ்க்கையினைப் பாடிவரும்
வானம்பாடிக்† கவிஞ!
வாழ்க! வணங்குகிறேன்!

வாகை தனைச்சூட
வந்த புலவீர்! சொற்
பாகை அருந்த வந்த
பசியுடையீர்! வணங்குகிறேன்!

பள்ளியிலே அன்று
படிக்குங்கால் ஆசிரியர்
அள்ளிக் கொடுத்த
அறிவியல் நூற் கருத்துக்கள்
ஒன்றும் இதயத்தில்
ஒட்டாமல் போனதால்
இன்று பொழுதெல்லாம்
இலக்கியத்துக் கடல் மூழ்கிக்
களைத்தும் உடல்மெலிந்தும்
கற்பனைக்(கு) உளங்கொடுத்தும்
இளைத்தும் இருக்குமெனை -
விஞ்ஞானி யாய்மாறி
வாகை தனைச்சூட
வாவென்(று) இழுத்து வந்தீர்;
ஈகைக் குணமுடையீர்.
என்செய்வேன்.... முயல்கின்றேன்!

---

† வானம்பாடி - கண்ணதாசன் எடுத்த திரைப்படம்.

உலகை உயரத்தில்
உண்மையிலே தூக்கிவைக்கப்
பலகை கொடுத்தவன் யார்?
பகுத்தறிவை வளர்த்தவன் யார்?
காற்றை அடக்கிக்
கடல் மீதும் ஆணையிடும்
ஆற்றல் மிகுந்தவன் யார்?
ஆற்றல் மிகும் நீரைத்
தேக்கி யளிக்கின்ற
திட்டம் அளித்தவன் யார்?
நீக்கமற எங்கும்
நிறைந்துள்ள மின்வெளிச்சம்
படைத்துக் கொடுத்தவன் யார்?
பாருலகச் செய்திகளைத்
தொடுத்தெளிதாய் அச்சாக்கும்
தொழில் கற்றுத் தந்தவன் யார்?
அழகற்றோர் கூட
அலங்காரம் பண்ணித்தம்
நிழற்படத்தைக் காணும்
நிலைவகுத்துத் தந்தவன் யார்?
காலைச்சிற் றுண்டியினைக்
கல்கத்தாவில் முடித்து
மாலை விருந்துக்கு
மதுரை வரவைத்தவன் யார்?
அமெரிக்க நாட்டில் ஓர்
அறிவாளி பேசுவதைக்
குமரிக் கரையிருப்போர்
செவிகுளிரக் கேட்டிருக்கச்
செய்தவன்யார்? வேண்டுங்கால்

செயற்கை மழை நீரைப்
பெய்விக்க முயலும்
பெருமைக் குரியவன் யார்?
கலைஞர் உரையாடல்
கவிஞர் உயிர்ப்பாடல்
சிலையாகி மனங்கவரும்
சிற்றிடையாள் நடனம், கண்
மருட்சி பெறச்செய்யும்
மகத்தான காட்சியுடன்
புரட்சி நடிப்பாற்றல்
புகுத்தி வறிஞர்களும்
அரைவெண்பொற் காசளித்து
முழுஇன்பம் அனுபவிக்கத்
திரைப்படத்தை உருவாக்கித்
தந்தவன்யார்? விஞ்ஞானி!

விஞ்ஞானி பரப்பும்
வெளிச்சம் இலையென்றால்
அஞ்ஞான இருளை
அகற்ற வழியில்லை.
இந்நாளில் காணும்
ஏற்றமிகு கருவியெல்லாம்
முன்னாளில் கிடையாது;
முன்னேற்றம் கிடையாது;

தருமன் காலத்தில் ஒரு
தந்தி கிடையாது.
கருணன் காலத்தில் கைக்
கடிகாரம் கிடையாது.

சீதை மணவாளன்
சீராமன் காலத்தில்
ஏது புகைவண்டி?
ஏது தொலைபேசி!
கண்ணனுக்குத் தாசன்தன்
காலத்தில் உள்ளதைப்போல்
கண்ணன் காலத்திலொரு
'கார்' ஏது? மேன் மேலும்
ஞாலம் பலப்பல விஞ்
ஞானம் அடையும்; வருங்
காலம் அதன்பயனைக்
காணும்; களிப்படையும்

''பட்டுத் துகிலோடும்
பலவண்ண உடையோடும்
எட்டுத் தினங்களிலே
எப்படியும் வருவேன் நான்''
என்றுரைத்துப் போனான்;
இருபதுநாள் சென்றும் ஏன்
இன்னும் வரக்காணோம்?
என்செய்வோம்? ஒருவேளை
ஏமாற்றி விடுவானோ...?
இருக்காது....! வருந்தாமல்
நாம் ஆற்றி யிருந்திடுவோம்;
நாளை நிச்சயம் வருவான் -
என்றெண்ணிக் கண்கள்
இரண்டையும் வழிமேலே
ஒன்றவைத்து வெளித்திண்ணை
ஓரத்தில் நின்றபடி

காதலனை எதிர்பார்த்துக்
கலங்கும் இளமகள்போல்
பேதலித்து வண்ணான்
பெருவரவுக்(கு) இந்நாளில்
எல்லோரும் கலங்குகிறோம்;
இதைப்போக்கத் தானாக
எல்லாப் பணிகளையும்
ஏற்றுத் துணிதுவைத்து
முடித்து நொடிப்பொழுதில்
காயவைத்துத் தேய்த்து
மடித்துத் தருகின்ற
மனத்துக் கினிதான
எந்திரவண் ணான்விரைவில்
இல்லம் அனைத்திலுமே
வந்தாலும் வரலாம்;
வரச்செய்வான் விஞ்ஞானி

கல்வி யளித்துக்
கசடகற்றும் கணக்காயர்
எல்லாரும் விரைவில்
இறுதி விடைபெற்றுப்
பைய விலகிவிடப்
பலநூலின் எண்ணத்தை
ஐயம் திரிபறவே
அதிசயமாய்க் கற்பித்தும்
கேள்விக்குத் தக்கவிடை
கேட்டும், நல் தேர்வுவைத்தும்
நாள் முழுதும் பாடம்
நவில்கின்ற மின் ஆற்றல்

எந்திரங்கள் கணக்காயர்
இடத்தையெலாம் கைப்பற்ற
வந்தாலும் வரலாம்;
வரச்செய்வான் விஞ்ஞானி!

சாதி சமயங்கள்
சாத்திரங்கள் கோத்திரங்கள்
ஏதுங் கருதாமல்
இன்றைக்குக் கலப்புமணம்
மெதுவாய் நடக்கின்ற
மேன்மைத் திறனறிந்து
பொதுவாய் வியப்போம் நாம்;
பூரிப்போம்; இதனைவிட
மண்ணுலக மகனொருவன்
மாலைப் பொழுதினிலே
விண்ணுலகில் ஏறி
விளையாடப் போகுங்கால்
செவ்வாய் தனைத்திறந்து
சிரித்துப்பூங் கையசைத்துச்
செவ்வாய்க் கிரகத்துச்
சிங்காரி ஒருத்திவரக்
கண்டு மனத்துடிப்பைக்
கண்மூலங் காட்டிக், கற்
கண்டு மொழியாளின்
காதலையும் பெற்றுப்பின்
முதிய வயதுடையோர்
முன்னின்று வாழ்த்துரைக்கப்
புதிய கலப்புமணம்
புரியத் தொடங்குகின்ற

அந்தத் தனிநாளும்
விரைவில், அதிவிரைவில்
வந்தாலும் வரலாம்:
வரச்செய்வான் விஞ்ஞானி!

குற்றாலம் கொடைக்கானல்
குயில் கூவிக் கொண்டிருக்கும்
வற்றா எழில்மிக்க
வைகை அணைக்கட்டும்
மல்லைக் கலைநகரும்
மற்றொன் றிதுபோலே
இல்லை எனத்தக்க
இனிய உதகையும்
ஈக்கடியும் கொசுக்கடியும்
இருந்தாலும் தெரியாத
தேக்கடியும் மூணாறும்
தேடி - மகிழ்ச்சியினைக்
கரைத்துக் குடித்துக்
கதைபேசிக் கண்ணாலே
சிரித்திருக்கும் காதலர்கள்
செல்லாமல் நினைத்தவுடன்
சந்திரமண் டலம்செல்லும்
விந்தைப் புதுநாளும்
வந்தாலும் வரலாம்'
வரச் செய்வான் விஞ்ஞானி!

கடல் நீரில் பயிர்விளைச்சல்
கண்டு பெருக்கிடவும்
படகேறிச் சுடுகின்ற
பாலையிலே சென்றிடவும்

மாண்டவனை எழுப்பிடவும்
மனிதன் தனையுயர்த்தி
ஆண்டவனைப் போலெங்கும்
ஆட்சி செலுத்திடவும்
விஞ்ஞானம் வழிவகுக்கும்!
வெற்றிக்கை யெழுத்திட்டு
மெய்ஞ்ஞானப் பத்திரத்தை
மேதினிக்(கு) இயற்றிவைக்கும்!

கனியறுக்க உதவுகின்ற
கத்தியினைக் கெடுமதியால்
மனிதன் கழுத்தறுக்க
மனிதன் பயன்படுத்தும்
பொல்லாச் செயலைப்போல்
பூதலத்தில் அறிவியலால்
நல்ல பயனடையும்
நாட்டம் சிறிதுமின்றி
ஆதிக்க வெறிபிடித்தோர்
அணுக்குண்டால் தம்பலத்தைச்
சோதிக்க நினைக்கிறார்
சுகத்தை அழிக்கின்றார்!
ஆக்கத் தொழிலுக்கே
அணுசக்தி என்கின்ற
நோக்கங்கொண் டால்வையம்
நொடிப்பொழுதில் பூக்காடே!

மேலைத் திசைநாட்டில்
மேதக்க விஞ்ஞானச்
சாலைகளை அமைத்துச்
சரியான வளர்ச்சியினை

நாடுகின்றார்; வளர்கின்றார்.
நாமோஉட் பூசலினால்
வாடுகிறோம்: வீணான
வளர்ச்சியினால் வதங்குகிறோம்!

விஞ்ஞானம் கண்டவரோ
விண்ஞானங்[†] காண்கிறார்;
மெய்ஞ்ஞானம் பேசும்நாம்
மெய்யையும்பொய் என்கின்றோம்

கையில் கிடைத்த
கனியைச் சிவபெருமான்
வையகத்தைச் சுற்றிமுந்தி
வரும்பிள்ளைக் களிப்பதுவாய்ச்
சொன்னார்; பின் சுற்றிவந்த
வேலவனுக் களிக்காமல்
தன்னைமெல்லச் சுற்றிவந்த
தனயனுக்குத் தான் அளித்தார்
என்ற கிழக்கதைகள்
இயம்பும்வரை விஞ்ஞானம்
வென்று தலைதூக்கி
விளங்கமுடி யாதிங்கே!

கொடிக்கும் சிறுசெடிக்கும்
கூடஉயி ருண்டென்று
தொடக்கக்கா லத்தில்நம்
தொல்காப்பி யன்உரைத்தான்.

---

[†] விண்ஞானம் - Space Science

'வலவன் ஏவா-வான
ஊர்தி' பற்றி மதிநுட்பப்
புலவன் ஒருவனன்றே
புறப்பாட்டில் குறிப்பிட்டான்.

பழந்தமிழர் விஞ்ஞானப்
பட்டறிவைப் போற்றாமல்
இழந்தோம்; இருட்டில்
இருக்கின்றோம். இனியேனும்
சிந்திப்போம்; செயல்படுவோம்;
செங்கதிரைப்போய்த்தொடுவோம்
அந்த நெடுவானில்
அமர்ந்திடுவோம்; அறிவுப்பண்
பாடுவோம்; வெற்றிப்
பரிசடைவோம்; வாகைப்பூச்
சூடுவோம் ஒன்றாகச்
சூழ்ந்து!

❖

# வாழ்வு

*தலைவர்: கவிஞர் முடியரசன்*

*இடம்: திருவானைக்காத் தமிழ்ப்*

*பேரவைத் தொடக்கவிழா*

*நாள்: 25 - 4 - 1965*

*பொதுத்தலைப்பு: மனிதனைப் பாடுவேன்*

# வாழ்வு

❖

அரசே †வணக்கம். அன்பரீர்! வணக்கம்.
மனிதனைப் பாட மாட்டேன் என்றே
பேரடம் பிடித்த பிள்ளைப் புலவன்
வழியில் அடியேன் வந்தவன் அல்லேன்!
இதோ நான்,
மனிதனைப் பாடுவேன்! மனிதனைப் பாடுவேன்!
மனிதனின் வாழ்வு மகத்துவம் பாடுவேன்
அதற்குமுன்
ஊஞ்சல்மண் டபத்தில்* உட்கார்ந் திருக்கும்
உங்களைக் கேட்கிறேன்; உண்மையில் மனிதன்
வாழுகின் றானா? இல்லை - வாழ்வதாய்ப்
பொய்ம்மை நாடகம் போடுகின் றானா
உங்களைக் கேட்கிறேன்.... உங்களைக் கேட்கிறேன்

பார்த்தால் கண்களைப் பறிக்கும் நாகப்
பாம்புடல் போலப் பளபளக்கின்ற
மாடி வீட்டில் மன்னவன் போல
ஒருவன் காலை ஒன்பது மணிவரை
பஞ்சு மெத்தையில் படுத்துக் கிடக்கிறான்;
கட்டிய மனையாள் கனிந்த வாயால்
பள்ளி எழுச்சி பாடக் கேட்டு

---

† கவியரங்கத் தலைவர் முடியரசன்.

* கவியரங்கம் நிகழ்ந்த இடம்.

மெல்ல விழிக்கிறான்! மேனி நெளிகிறான்:
எழுகிறான்: குளிக்கிறான்; இலையில் படைத்ததை
இனிதாய்ப் புசிக்கிறான்; ஏப்பம் இசைக்கிறான்;
சிறிதுநேரத்தில் சிங்கார ஊர்தியில்
ஏறி அமர்கிறான்; எதிர்பார்த் திருக்கும்
கோலா கலவிழாக் கூட்டத்திற்கு
வருகிறான்; தலைமை வகிக்கிறான்; புகழ்ந்தோர்
போட்ட பூ மாலையைப் போட்டுக் கொண்டே
பேச, வாய் திறக்கிறான் - பேசவா செய்கிறான்....
'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்' என்ற வள்ளலார் வாசக
அருள்மழை பொழிகிறான்...... அடடா! 'தரணியில்
சமத்துவப் பயிரைத் தழைக்கச் செய்வோம்'
என்கிறான்; இடையிடை ஏசுவை புத்தரை,
காந்தியை இழுக்கிறான்; ஒரேகை தட்டல்....!
எல்லார்க்கும் நன்றி இயம்பிய பின்னர்
உல்லாச வண்டியில் இல்லம் வருகிறான்;
இரண்டுகல் கடக்கிறான்; எதிரில் ஒருவன்
பட்டினி யால்கண் பார்வை மங்கி
நடக்கவொண் ணாமல் நடுவீதி யில்விழக்
காண்கிறான்; உடனே கருணை நெஞ்சன்,
"தரித்திரம் பிடித்த சனியனை ஓரத்தில்
தூக்கிப் போட்டுத் தொலையடா!" என்று
'காரோட்டி'க்குக் கட்டளை இடுகிறான்;
கட்டளை வென்றதும் களிப்புடன் செல்கிறான்.

இப்படி
உளத்தில் நஞ்சும் உதட்டில் அமுதமும்
உடையவன் மனிதனா? உடையதா வாழ்வு?
உங்களைக் கேட்கிறேன்! உங்களைக் கேட்கிறேன்!

தன்மரு மகளின் தலையைப் பிடித்துக்
கொடுமைப் படுத்தும் கோபக் கார
மாமியார் போல, மழைமயச் சூறை
கூரையைப் பிய்க்கும் குச்சு வீட்டில்-
குறைவறப் பெற்ற குழந்தைக ளோடு
குடியிருக் கின்ற குசேலன் தம்பி
ஒருவன் கதிரவன் உதிக்கும் முன்னே
காலை வேளையில் கண்விழிக் கின்றான்;
ஏதே னும்கூழ் இருந்தால் குடித்துக்
கலப்பை யோடும் காளைக ளோடும்
வயலை நோக்கி வருகிறான்; உழைக்கிறான்;
நிலமங் கைக்கு நெற்றியின் முத்தை
வழங்கி வழங்கி வள்ளல் ஆகிறான்;
நடுகிறான்; ஒவ்வோர் நாளும் பாடு
படுகிறான்: மணிகளைப் பார்க்கிறான்; ஒருநாள்
அறுக்கிறான்; குவிக்கிறான்; ஆனால் குவித்ததைத்
திடீரென ஒருவன் திருடன்போல் வந்தே
பறிக்கிறான்; சாக்குப் பைக்குள் கட்டி
இருபது வண்டியில் ஏற்றிச் செல்கிறான்!
இப்படி
ஒருவன் உழைக்க, மற்றொருவன் பிழைக்க
இருப்பதா வாழ்வு? இதுவா வாழ்வு?

ஒருவன்....
மாடுபோல் பார வண்டியை இழுக்கிறான்!
கழுதைபோல் முதுகில் கனத்தைச் சுமக்கிறான்!
நாய் போல் எச்சில் நக்கித் திரிகிறான்!
பன்றிபோல் சாக்கடைப் பக்கம் படுக்கிறான்!
எனில், மற் றொருவன் இன்னொரு பக்கம்

எலிபோல் சுரண்டி எங்கோ ஒளிக்கிறான்!
ஓநாய் போல்பிறர் உழைப்பைக் குடிக்கிறான்!
ஒட்டகம் போல ஒதுக்கிவைத் துண்கிறான்!
நரியைப் போல் நன்கு நடிக்கிறான்!

இப்படி
ஒருவன் வாட, மற் றொருவன் வாட்
இருப்பதா வாழ்வு? இதுவா வாழ்வு?
உங்களைக் கேட்கிறேன்; உங்களைக் கேட்கிறேன்!

வாழைப் பழத்தைவாங்குதல் போல
ஏழையின் கற்பை எளிதாய் வாங்கித்
துகில்உரி கின்ற துச்சா தனர்கள்
சதிவலை பின்னும் சகுனிகள் இன்னும்
இருக்கின் றார்களே இங்கே! இவர்கள்
இறக்கும் நாள்- மனிதன் பிறக்கும் நாள்! இல்லையா?
உங்களைக் கேட்கிறேன்! உங்களைக் கேட்கிறேன்!

விண்ணுக்கு மனிதன் விரையட்டும்; அதற்குமுன்
கண்ணுக் கெதிரில் காணும் கயமையை
விரட்டி அடித்து வீழ்த்த வரட்டும்.
செயற்கை மழைபெயச் செயட்டும்; அதற்குமுன்
துன்பக் கிணற்றைத் தூர்க்க வரட்டும்.
அணுவில் தாண்டவம் ஆடட்டும்; அதற்குமுன்
மனிதனை மனிதனாய் மாற்ற வரட்டும்.
வாழ்வை வசந்தமாய் ஆக்க வரட்டும்.

என்றைக்கு
ஏழ்மை வறுமை இடுகா(டு) ஏகுமோ
சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ
இலட்சிய வெறிகொண் டிளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ
பழைய பொய்ம்மைகள் பயந்தோ டிடுமோ
தன்னலம் மறந்து தாயகம் காத்த
மறவர் படைக்கு மரியாதை கிடைக்குமோ
தியாக உணர்வுத் தீக்குளித்திட்ட
வீரருக் கெங்கும் விழாக்கள் நடக்குமோ
அன்றே,
மனிதன் பிறக்கும் நாள்! மனிதன் வாழும்நாள்!
அன்றே
மனிதனைப் பாடுவேன்; மனிதனைப் பாடுவேன்;
மனிதனைப் பாடுவேன்; மனமகிழ்வோடே!

❖

# மூன்று

தலைவர்: கவிஞர் முடியரசன்

இடம்: மதுரை எழுத்தாளர் மன்றம்

ஏழாம் ஆண்டு விழா

நாள்: 4 - 7 - 1965

பொதுத்தலைப்பு: எண்கள்

# மூன்று

❖

மூன்றெழுத்தில் அமைந்திருக்கும்
முத்து 'மதுரை'யிலே
ஆன்ற தமிழ்ப்புலவர்
அமைந்திருக்கும் எழுத்தாளர்
மன்றம் வளர்கவே!
மாட்சி பரவுகவே!
தென்றலுக்கும் முன்புதித்த
செந்தமிழ்ப்பெண் வாழியவே!

ஈன்று புறந்தந்த
இந்த நிலத்துக்கு
மூன்றுதிரு வாசகங்கள்†
முத்தார மாய்த்தந்து
மூன்றெழுத்துத் தாய்மொழியின்
மூவா நலங்காக்கும்
மூன்றெழுத்துப் பெயர்பெற்ற
தலைவா!★ உன் முன்பாடும்

---

† கடமை, கண்ணியம், கட்டுப்பாடு:

★ விழாவின் சிறப்புச் சொற்பொழிவாளர் அறிஞர் அண்ணா.

பேறு கிடைத்தமைக்குப்
பெருமைப் படுகின்றேன்;
மாறுபடு மனமறியேன்,
மகிழ்ந்துன்னை வணங்குகிறேன்

எண்ணச் சிகரத்தில்
இலச்சினையைப் பொறிக்கின்ற
அண்ணன் முடியரசன்†
அவர்கட்கும் - மன்றத்தின்
காவலர்க்கும்-கா வளர்க்கும்
கவின்மலராய்க் கவிநல்கும்
பாவலர்க்கும்-பா வளர்க்கும்
பண்பினர்க்கும் என்வணக்கம்.

முக்கால மும்உணர்ந்த
முனிவனல்லன், மூன்றைப்பின்
எக்கார ணத்தாலே
எனக்குக் கொடுத்தாரோ?
முந்நீர்★ கடந்திட்ட
மூன்றெழுத்துக்§ குலத்தோன்றல்
தன்பெயரை அப்படியே
தாங்கி இருக்கின்ற

---

† கவியரங்கத் தலைவர் முடியரசன்.

★ முந்நீர் - கடல். ஆற்று நீர் ஊற்றுநீர் மழைநீர் கொண்ட கடல் என்றும் படைத்தல் அழித்தல் காத்தலாகிய முச்செய்கை கொண்ட கடல் என்றும் தமிழகத்தின் கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய முத்திசையிலும் நீர் சூழ்ந்த கடல் என்றும் முப்பொருள் கூறுவர்.

§ சோழன், இராசேந்திரன்,

இவன்தான் மூன்றென்னும்
இனிதான எண்பற்றிக்
கவிபாட முடியுமெனக்
கருதி அழைத்தாரோ?
இல்லை
ஒற்றைத் தனிமரம்போல்
ஒருகாலம் வாழ்ந்திருந்தான்
சற்றும் சுவையின்றிச்
சலித்துமனம் வாடிப்பின்
திரண்ட வனப்புடைய
சேயிழையை மணமுடித்தே
இரண்டானான்; ஈரிரண்டு
நாட்களுக்கு முன் - வாழ்க்கை
பற்றுக்கொரு பிடிப்பாய்ப்
பால்வண்ணச் சுடர்மதியைப்
பெற்றுமூன் றாகிப்
பெருமைப் படுகின்ற
இவன்தான் மூன்றென்னும் நல்-
எண்பற்றி அனுபவித்துக்
கவிபாட முடியுமெனக்
கண்டு பிடித்தாரோ?
கண்டு பிடித்திந்தக்
கவிதை அரங்கத்தில்
கொண்டுவந்து நிறுத்திவிட்டார்;

குழந்தையையும் கடவுளையும்
ஒன்றாகக் கொண்டாடும்
பழந்தமிழர் கூடியுள்ளீர்;
பயமின்றிப் பாடுகின்றேன்!

எண்களுக்குள் மூன்றுக்கே
எழுத்துக்க ளும்மூன்றாம்!
எண்களுள் 'வேறெதுவும் அந்த
எழுத்தால் அமைவதுண்டா?
அகர வரிசையினை
அறிவீர்கள்' அவ்வரிசைச்
சிகரமென விளங்கித்
திகழ் ஆய்த எழுத்துக்குப்
புள்ளிகளும் மூன்றாகும்!
பூமிக்(கு) அறிவமுதம்
அள்ளி வழங்கியுள்ள
அக்காலத் தமிழர்களின்
உள்ளம் கவர்ந்த
ஒருசொல்லே மூன்றாகும்!
வள்ளுவனார் தந்திருக்கும்
வாழ்க்கை விளக்கநூல்
மூன்றெழுத்தில் உள்ள
முறையெண்ணிப் பாருங்கள்!
மூன்றுபா லாய்க்குறள்
முகிழ்த்ததையும் பாருங்கள்!

தங்கக் குணங்கொண்ட
தமிழ் நாட்டார் முன்புகண்ட
சங்கங்கள் மூன்றாகும்
சங்கங்கள் மூன்று கண்டோர்
பச்சைக் குழந்தைக்குப்
பாலூட்டும் சங்கொன்று,
நிச்சயித்த மணநாளில்
நிகழ்த்தும் இசைச் சங்கொன்று,

காகங் கழுகுண்ணக்
காத்திருக்கும் காட்டகத்தே
ஏகுங்கால் ஊதும்
இழவுச்சங் கொன்று - என்று
தங்கள் புவிவாழ்வில்
சந்திக்கத் தவறாத
சங்குகளும் மூன்றாகும்!
சங்க இலக்கியத்தைப்
படித்துச் சுவைத்துப்
பசித்தால் மிகவிரும்பிக்
கடித்துச் சுவைக்கும்
கனிவகைகள் மூன்றாகும்!

'காதலெ'ன்றும் 'மணமெ'ன்றும்
'களவெ'ன்னும் 'கற்பெ'ன்றும்
ஓதுதமிழ்ச் சொற்களெல்லாம்
உருவாகும் மூன்றெழுத்தில்!
அப்பா, அம்மா, அத்தை
அக்கா, தங்கை, தம்பி
செப்பும் அண்ணா- என்னும்
தேனுறவுச் சொற்களையும்
உருவாக்கும் மூன்றெழுத்தே!
ஒருபாவை, வயிற்றினிலே
கருவாய் வளர்த்துக்
கணக்காய் ஈரைந்து
மாதத்தில் காணும்
மணிக் 'குழவி மூன்றெழுத்தே!

மோதும் பிறமொழியின்
மோகத்தால் சிலதாயர்
'அம்மா'வென் றக்குழவி
அழைப்பதனை விரும்பாமல்
'மம்மி'† யென்றே சொல்லப்
பயிற்றுவிப்பார்; புரியாமல்
அம்மியென்று கூறும்
அதுசரிதான்.... குழவிக்(கு) ஓர்
அம்மிதானே அன்னை?
அடடா, மிகப்பொருத்தம்!
மனைவியென்றும் வாழ்க்கைத்
துணைவியென்றும் மணித்தமிழில்
இணையான சொல்லிருக்க
'இல்லாள்' என்றொருசொல்ஏன்?
இல்லத்தை ஆளும்
இயல்புடையாள் என்பதனால்
'இல்லாள்' எனப்பட்டாள்
பெண்என்பர்; என்றாலும்
''அரிசியில்லை உப்பில்லை
அடுப்பெரிக்க விறகில்லை.
கறிக்கடைக்குச் சென்றுவரக்
கையில் பணமில்லை''
என்றுதினம் ''இல்லை'' யெனும்
மூன்றெழுத்துப் பல்லவியை
நின்றிசைக்கும் காரணத்தால்
நேரிழையா ளை, முன்னோர்

† ஆங்கில வழக்கு Mummy

'இல்லாள்' என் றார்என்பேன்;
இதைக் கேட்டுச் சீறிவர
நல்லவே ளை - என்றன்
நாயகியாள் இங்கில்லை!

''கொட்டு முரசொலிக்கக்
கொள்கைத் திறம்சிறக்க
எட்டுத் திசைகளிலும்
இசைபரப்பி, ஒளிபரப்பி
அண்ணாஇத் திருநாட்டை
ஆண்டிடுவாய் நீ'' என்று
அண்ணல் இளங்கோ
அகமகிழ வாழ்த்திவிட்டுச்
சென்றார்; சமண்பள்ளி
சேர்ந்தார்; சிலம்பிசைத்தார்.
என்றும் இறவாமல்
இருக்குமவர் காப்பியத்தின்
காண்டங்கள் மூன்றன்றோ!
கதைக்களங்கள் மூன்றன்றோ!
ஆண்டஇனம் மூன்றன்றோ!
அவ்வினத்தார் விண்தழுவ
ஏற்றிப் பறக்கவிட்ட
எழிற்கொடிகள் மூன்றன்றோ!
போற்றி அவர்வளர்த்த
பூந்தமிழும் மூன்றன்றோ!

குத்து விளக்கெரிந்து
கொண்டிருக்கும் பந்தலிலே

பத்துப் பெரியவர்கள்
பல்லாண் டிசைத்துநிற்கச்
செங்கரும்புச் சாற்றினிப்பைத்
தேகமெங்கும் சேர்த்துவைத்த
மங்கை ஒருத்திக்கு
மங்கல நாண் பூட்டி
அகம்மலரக் கண்மலர
முகம்மலரப் போடும்
முடிச்சுக்கள் மூன்றன்றோ!

மின்னும் இளமையெழில்
மேனிக்கே ஏற்றாற்போல்
பொன்னும் மணியும்மிகப்
பூணக் கிடைத்தாலும்
பூவையர்கள் வாழ்வினிலே
போற்றுகின்ற மங்கலங்கள்
பூவோடு கொச்சிமஞ்சள்
பொட்டென்னும் மூன்றன்றோ!

'ஈசன் எனினும், அவ்-
ஈசனுக்குத் தொண்டாற்றும்
தாசன் எனினும், உயர்
தத்துவங்கள் பேசும்
அடிகள் எனினும், இல்லை
அன்றாடம் உழலும்
குடிகள் எனினும், செங்
கோலேந்து வோரெனினும்

எல்லாரும் ஒன்றெமக்கே
என்பது போல்' ஓயாத
தொல்லை கொடுத்திரவுத்
தூக்கம் கெடுத்துள்ளம்
வாட்டி வருத்தி
வதைத்துநிதம் புண்படுத்தி
ஆட்டிப் படைக்கின்ற
ஆசைகளும் மூன்றன்றோ!

'தீயவற்றைப் பார்க்காதே
தீயவற்றைக் கேட்காதே
தீயவற்றைப் பேசித்
திரியாதே' என்ற - அற
உருவாய்த் திகழ்ந்த
ஒருகாந்திக்(கு) உண்மைக்
குருவாய் இருந்தசிலைக்
குரங்குகளும் மூன்றன்றோ!

உலகம் உயர
உழைத்தஅக் காந்தியின்மேல்
கொலைகாரன் சுட்டகொடுங்
குண்டுகளும் மூன்றன்றோ!

மூன்றுபே ராய்ச் சென்றால்
முடியாது வினையென்று
மூன்றை வெறுப்போர்கள்
முட்டாள்கள்; மாறாக

மூன்றாம் உலகப்போர்
மூளக்கூ டாதென்போர்
சான்றோர்; துயரச்
சரித்திரத்தைக் கற்றுணர்ந்தோர்!

வேண்டும் அடியார்க்கு
விரும்பி வரமளிக்கும்
ஆண்டவனார் மூவரென்றும்
அவர்தொழில்கள் மூன்றென்றும்
திரிபுரத்தை எரித்துப் பின்
மருமகனை யும்எரித்த
விரிசடைக் கடவுளுக்கு
விழிகள்மூன் றுண்டென்றும்
தேவர் உலகத்தில்
தேனின்பம் கொடுக்கின்ற
தேவியர்கள் மூவரென்றும்
சீர்காழிக் குளக்கரையில்
அம்மை முலைப்பால்
அருந்திப்பண் பாடுங்கால்
சம்பந்தர் வயது
சரியாக மூன்றென்றும்
புகலும் கதைகளிலும்
புராணத்தி லும்மூன்(று)
அகப்பட்டு விழிக்கிறதே....!

அன்பர்களே! இன்னும்நான்
மூன்றுபற்றி அதிகம்
மொழிந்தாற்பின் இவ்விடத்தில்
மூன்றுபே ரைக்கூடக்

காண முடியாதென்(று)
எண்ணி விடைகொண்டேன்.
எண்ணில், மூன் றென்கின்ற
எண்ணுக்கு முண்டோ
எதிர்?

❖

# பொருள் செயல் வகை

*'தலைவர் : தமிழ்க்கடல், ராய. சொக்கலிங்கம்*

*இடம்: தேவகோட்டைத் திருக்குறட் கழகம் - குறள்விழா*

*நாள்: 17 - 7 - 1965*

*பொதுத்தலைப்பு: திருக்குறள் வழி*

# பொருள் செயல் வகை

❖

உப்புச் சுவையோ(டு)
உதித்தகடல் போலன்றித்
தப்பி உதித்த
தனிக்கடலே! தமிழ்க்கடலே![†]
வையத்துள் வாழ்வாங்கு
வாழ வழிவகுத்த
ஐயன் புகழை
அழகழகாய் அற்புதமாய்
வீரக் குரலில்
விளக்கவந்த தோழர்காள்!
ஊரகத்தீர்! உங்கட்கென்
உள்ளங் குளிர்வணக்கம்!

பொருள் செய்யும் வகைபாட
புறப்பட்டு வாவென்று
குறட்கழகத் தார்என்னைக்
கூப்பிட்டார் எதனாலோ?

கயல்துள்ளிக் களிக்கின்ற
கடல்கடந்து தம்பொருளை
அயல்நாடு பலவற்றில்
அளவின்றிப் புரளவிட்டுக்

---

[†] கவியரங்கத் தலைவர் - தமிழ்க்கடல் ராய. சொ.

'கொண்டுவிற்றுப்' பெரும்பொருளைக்
கொண்டுவந்த குலவழியோர்
மண்டி யிருக்கும்இம்
மன் றத்தில் அடியேன்நான்
பொருள்செய்யும் வகைபற்றிப்
புகுந்துரைத்தால் என்னையொரு
பொருளாய் மதிப்பாரோ?
போற்றிப் புகழ்வாரோ?
உலைக்கொல்லன் தெருவினிலே
ஊசிவிற்க வந்தவனின்
நிலைஎன்றன் நிலையென்று
நினைப்பாரோ? சரியான
பித்தையா....! எனச்சிரிப்பாய்ப்
பேசுவரோ? என் அன்பர்
முத்தையா† எனைத்திக்கு
முக்காட வைத்தாரோ?

சூழ்வறுமைச் சிறைவிட்டுச்
சுதந்திரத்தை அனுபவிக்க
வாழ்க்கையிலே பொருள்செய்யும்
வகையறியேன் என்றாலும்
வள்ளுவரின் வாய்மொழிக்கு
வகுப்பறையில் நாள்தோறும்
உள்ளபடி பொருள்செய்யும்
ஒருவன் நான் என்பதனால்
பொருள்செய்யும் வகைப்பற்றிப்
புனைந்துகவி பாடுவதில்

---

† முத்தையா - குறட்கழகச் செயலாளர்.

ஒருவகையில் பொருளுண்டென்(று)
உணர்ந்தென்னை அழைத்திருப்பார்
என்று கருதுகிறேன்:
இல்லையா அவையோரே?
நன்று! மிகநன்று!
நான்முயற்சி செய்கின்றேன்.

பொருளென்றால் 'தலைப்'பென்றும்
பொருளென்றால் 'அர்த்த'மென்றும்
பொருளென்றால் 'பண'மென்றும்
பொருளுக்குப் பலபொருளாம்
அரியதொரு வாழ்க்கையெனில்
அதற்(கு) அர்த்தம் வேண்டுமன்றோ?
அரியதொரு வாழ்க்கைக்கோர்
அர்த்தமே சேர்ப்பதென்றால்
பொருள்சேர்க்க வேண்டும்;
பொதுவாக வாழ்க்கைக்குப்
பொருள்வேண்டும் என்றே
புகன்றால் பொருந்தாதோ?

எதையும் பகுத்தறியும்
எண்ணம் குருடாகி
இதயம் முடமாகி
இருக்கும் பிறவிகளும்
கையில் பணமிருந்தால்
கண்டிப்பாய்க் கொண்டாடும்
தெய்வமாய் மாறிடலாம்;
திருக்குறளார் இதைஉணர்ந்தே
''பொருள் அல் லவரைப்
பொருளாகச் செய்யும்

பொருள் அல்ல(து) இல்லை
பொருள்'' என்றார். பணமென்றால்
பிணங்கூட வாயைப்
பெரிதாய்த் திறக்குமென்ற
குணமிக்க முன்னோர்தம்
கூற்றுச் சரிதானே!

இருளில் நடப்பதற்கும்
இயன்றிடலாம்; நிச்சயமாய்ப்
பொருளின்றி வாழ்வதுவோ
பூதலத்தில் இயலாதே!
''இல்லாரை எல்லாரும்
எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர்
சிறப்பு'' என்றார் மெய்யறிஞர்.
செல்வம் இருந்தால்தான்
சேர்ந்திருக்கும் சுற்றமெல்லாம்;
இல்லானாய் மாறிவிட்டால்
ஈன்றெடுத்துப் பெயரிட்ட
அன்னையும் புறக்கணிப்பாள்;
அம்மி தனைமிதித்துத்
தன்னை மணந்திருக்கும்
தையலும் புறக்கணிப்பாள்.
வறுமை தலைவாசல்
வரக்கண்டால் காதலோ
பொறுக்காமல் கொல்லைப்
புறப்பக்கம் நடைகட்டும்!
''கண்ணே! உன் வதனத்தின்
கட்டழகை அருந்தியவா(று)

எண்ணற்ற காலம்
இனிதாய் உயிர்வாழ்வேன்;
பசியா வரமளிக்கும்
பாவைஉன் இதழ்சுவைத்தால்
பசியா வரும்?'' என்று
பலவாறு புகழ்வதெல்லாம்
பொய்யாய்க் கனவாய்ப்
பழங்கதையாய்ப் போய்விடுமே,
கையில் பொருளில்லாக்
கதிமட்டும் நேர்ந்துவிட்டால்!

வாய்மொழியால் அமுதத்தை
வார்ப்பவளின் மொழிவேப்பங்
காய்மொழியாய் மாறும்;
கசப்புச் சுவைமீறும்.
தாரம் சுமையாகத்
தான்தோன்று வாள், பொருளா
தாரம் சுவையாகத்
தான்உயர வில்லையென்றால்!

விரித்துவைத்த கதிர்மணியை
விழுங்கவரும் கோழிகளை
விரட்டுதற்குக் குழைகழற்றி
வீசி எறிந்தாராம்
அந்நாள் மகளிரெல்லாம்;
அச்செல்வச் சிறப்பெங்கே?
இந்நாளில் கழற்றுகிறார்
ஏதற்கென்றால் அடகுவைக்க!

நல்வாழ்க்கை யென்று
நமதினத்தார் போற்றுகிற
இல்வாழ்க்கை பலருக்கின்(று)
இல்லாத வாழ்க்கையே!
இல்லையெனும் சொல்லின்
எதிரொலிகேட் காதிருக்கச்
செல்வம் பெருகிச்
செழித்தாக வேண்டுமன்றோ!

வள்ளுவனார் இதற்குத்தான்
வழிவகைகள் கூறுகின்றார்.
கள்ளத் தனமின்றிக்
கைத்தனத்தைப் பெறவேண்டும்.
காடு திருத்திக்
கழனி களைக்கண்டு
பாடுபடவேண்டும்;
பயன்காணவேண்டும் நாம்.
குத்துக்கல் போல் வீணாய்க்
குந்தியிரா மல், ஆழி
முத்துக் குளிப்பதற்கு
மூச்சடக்க வும்வேண்டும்.

பூவிரித்து மணம்பரப்பும்
பூங்கா நிறைந்திருந்த
காவிரிப்பூம் பட்டினத்துக்
கடற்கரையில் முன்னாளில்

ஏற்றுமதி செய்தபொருள்
ஏராளம்! ஏராளம்!
ஈற்று மதியனைய
கேரளத்துத் தந்தமுடன்
தேக்கும் மிளகும்
செழுமுத்தும் சந்தனமும்
தூக்கிச் சுமந்தபிறர்
தோணிகளோ ஏராளம்!
ஏற்றுமதி செய்துபொருள்
ஈட்டியதோர் காலம்போய்
வேற்று நிலமிருந்து
வேண்டும் அளவுக்(கு)
இறக்குமதி செய்துகொண்டே
இருக்கின்றோம்; நம் நாடு
சரக்குகளை விரிக்குமொரு
சந்தையாய் மாறியதே!

எந்த இடமெனினும்,
இன்னலிருள் நீக்குகின்ற
நந்தா விளக்கென்றும்
செருக்கறுக்கும் எஃகென்றும்
அன்புத்தாய் பெற்றெடுத்த
அருட்குழவி தனைவளர்க்கும்
இன்பச் செவிலியென்றும்
இன்னும் பலவாறு
பொய்யா மொழிப்புலவர்
பொருளைப் புகழ்கின்றார்;
''செய்க பொருளை'' எனச்

செப்புகின்றார்! இன்றுசிலர்
செய்க பொருளை என்ற
திருக்குறளை எண்ணாமல்
செய்கின்றார் பொருளைத்தான்
சீர்கெட்ட வழியினிலே!

கள்ளப் பணமடித்துக்
கம்பிகளை எண்ணுகின்றார்.
வள்ளுவனார் பொருள்செய்ய
வகுத்த வழி நியாயவழி.

அரிசி யிலேகல்லும்
ஆவின்பா லில் நீரும்
சரிபாதி கலந்துபொருள்
திரட்டுவதோ திருட்டுவழி;
மானபங்கம் பார்க்காமல்
மதிமறந்து வருபவர்க்(கு)
ஈனஉடல் தந்துபொருள்
ஈட்டுவதோ இருட்டுவழி!

நொடிப்பொழுதில் ஒன்றைத்தான்
நூறாக்க வேண்டுமெனத்
துடித்துச் சூ தாடுவதோ
தூய்மையற்ற சறுக்குவழி
ஒரிசாக் குலுக்கலிலே
ஒருலட்சம் ரூபாயைப்

பரிசாய் எதிர்பார்த்தல்
பச்சைக் குறுக்குவழி!
இந்த வழிகளிலே
ஈட்டும் பொருளெல்லாம்
வந்ததிலும் விரைந்தேகும்;
வள்ளுவனார் அதனால்தான்
''அருளொடும் அன்பொடும்
வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள
விடல்'' என்று போதித்தார்.

சேர்த்தபெரும் செல்வம், ஒரு
சித்திரத்தாள் கவின்விழிகள்-
பார்ப்பதற்கும் காதலனால்
பார்க்கப் படுவதற்கும்
பயன்படுதல் போல் தனக்கும்
தனைச்சார்ந்த பலருக்கும்
பயன்படுதல் வேண்டும்.

பயனற்ற தைக்குறளார்
நன்றியில் செல்வமென்றார்;
நச்சு மரமென்றார்.
மன்றலின்றி மூத்தழிந்த
மங்கை நல† மென்றார்.

---

† அற்றார்க்கு ஒன்றுஆற்றாதான் செல்வம்; மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று - குறள் (1007)

பாதாளம் மட்டும்
பணம்பாயும் என்பார்கள்;
பாதாளம் என்ன?
அறிவோடு பணமிருந்தால்
கண்கவரும் புதுமைக்
கருவிகளைக் கணக்கின்றி
விண்வெளியை நோக்கி
விரைந்து செலுத்தி நாம்
வானம் வரைக்கும்
பணம்பாயும் எனப்புதுமை
யானமொழி படைத்திடலாம்;
அமெரிக்கர் ருசியரைப்போல்!

பொருளிலையேல் தனிஒருவர்க்(கு)
இன்பமில்லை; அறமில்லை.
பொருளிலையேல் நாட்டுக்குப்
படையில்லை; அரண்இல்லை.
பொருளிலையேல் அறவழகர்
பொன்னூலுக் கிவ்வூரில்
பெரியவிழா நடக்கின்ற
பேச்சுக் கிடமில்லை!
''திரு'' என்றால் பொருள்என்று
தேர்ந்ததொரு பொருளுண்டு.
பொருள்செய்யும் வகைபற்றிப்
போதிக்கும் காரணத்தால்
''திரு'' என்ற அடைமொழியத்
தேன்குறளுக்(கு) ஏற்றதுதான்!

அருமைப் பெரியோரே!
அன்பர்களே! வள்ளுவரின்
பொருள்மொழியைப் பயில்வீர்
பொருள்சேர்க்க முயல்வீர்,
திருநாடாய் இந்நாடு
திகழ வழிவகுப்பீர்
என்று பணிகின்றேன்;
என்கவிதை முடிக்கின்றேன்:
நன்றி விடைபெற்றேன்
நான்.

# ஆறு

*தலைவர்: கவிஞர் முடியரசன்*

*இடம்: மதுரைத் தியாகராசர் கல்லூரி-*

*நாள்: 22 - 2 - 1966*

*பொதுத்தலைப்பு: நீர்க்குடும்பம்*

# ஆறு

❖

ஆற்றங் கரையில்
அமைந்திருக்கும் கலைக்கோயில்†
ஏற்றம் பெறுகவே!
என்றும் வளர்கவே!
இந்தக் கலைக்கோயில்
இருந்து தமிழ்வளர்க்கும்
சிந்தைக்கு இனியர்
சிதம்பரனார்க்★ கென்வணக்கம்!

தண்மை சலிப்பில்லாத்
தன்மை தடையுடைக்கும்
வன்மைகொண் டுலகத்தை
வாழ்விக்கும் நீரைப்போல்
அமையும் கவிதைகள்
அளிக்கும் முடியரசே§
'இமையும் விழியும்போல்
யானும் என் தமிழும்' என்(று)
இடியேறு போல்முழங்கும்
இளைஞர்காள்! வெற்றிப்
படியேறும் கலைவகைகள்
பயில்பவரே! என்வணக்கம்

---

† தியாகராசர் கலைக்கல்லூரி;

★ டாக்டர், அ. சிதம்பரநாதனார் - கல்லூரி முதல்வர்.

§ முடியரசன் - கவியரங்கத் தலைவர்.

கங்கைகொண்டான், செல்வக்
காவிரிகொண்டான் என்னும்
சிங்க மறவன்தன்
திருப்பெயரைக் கொண்டதனால்
ஆற்றின் நலம்பாட
அடியேன் தான் பொருத்தமெனப்
போற்றி அழைத்தீர்கள்
போலும்! அதுசரிதான்....
கண்ணீர் வடிக்கின்றார்
காரிகைபோல் அந்தோ என்(று)
எண்ணி ரகுமானுக்(கு)
இரங்கிடலாம்! ஏன் இந்த
ஆற்றங் கரையின்
அருகிருந்தும் ஏரியைப்போய்
ஏற்றிப் புகழவந்தார்
என் தம்பி நன்றியில்லை;
பொன்னி எனு ம்பெயரைப்
பூண்டிருக்கும் புலவர்மகன்
என்ன கருத்தால்
இமிழ்கடலைப் பாடவந்தார்?
ஆறு-தலையுடை தமிழ்
அன்பன் செக தீசன்† எவ்
வாறு மழைமாட்சி
வருணிக்க வந்தாரோ?

---

† நீர்க் குடும்பத்தைச் சேர்ந்த கண்ணீர், ஏரி, கடல், மழை பற்றிப் பாடிய கவிஞர்கள் முறையே அப்துல் ரகுமான், தியாகராசர் கல்லூரி மாணவர் காமராசன், பொன்னிவளவன், தமிழன்பன் என்ற செகதீசன்.

நீர் என்றால் நதி நீரே;†
நிசம்! இதனை மறந்துவிட்டு
நீர் உரைப்ப தெல்லாமே
நீர்மேல் எழுத்தாகும்
என்றிவர்க்குச் சொல்லி
எழிலாற்றின் இயக்கத்தை
நன்றாய் இசைப்பேன் நான்!
நடக்கின்ற ஆண்(டு) அறுபத் (து)
ஆறு!- இந்த ஆண்டில் வர
லாறுதனைப் போல்பெருகும்
ஆறு தனை இசைக்க
ஆரும் இசைவாரே!

மூவாசை துறந்தோன் தன்
முத்தமிழ்நூ லாம்சிலம்பு
காவிரியின் கரைபிறந்து
கவின்வையைக் கரை வளர்ந்து
பேராற்றங்கரையினிலே
பெருமைபெற்ற தறிவீர்கள்,
நீராடும் மாந்தர்மணம்
நீள்வையை கவர்ந்தவிதம்
சித்திரிக்கும் பரிபாடற்
சிறப்பை அறிவீர்கள்!
முத்துமணி மின்னும்
மூத்தபுகழ்ப் பொன்னிநதிப்
பயனழகை விரித்துரைக்கும்
பாலையினை* அறிவீர்கள்!

---

† "தண்ணீருங் காவிரியே...." தனிப்பாடல்

* பட்டினப் பாலை

நயமுணரும் கவிஞர்
நதிமாட்சி தனில்மயங்கி
ஆறில்லா ஊரின்
அழகுபா ழாம் என்று
கூறிக் களித்தார்கள்
கொஞ்சு தமிழினிலே!

வெள்ளையர்தம் பிடியினின்று
விடுபட்டால் ஆனந்தப்
பள்ளிசைக்கும் தன்னாட்சிப்
பாரதம் தோன்றிவிட்டால்
பாலாறு தேனாறும்
பாயுமென அன்றைக்கு
நாலாறு தரம் சொன்னார்
நாவினிக்க! இன்றைக்குப்
பாலாறோ தேனாறோ
வேண்டாம் - கலப்பின்றிப்
பாலேனும் தேனேனும்
பார்க்க வழியுண்டா?
ஆனாலும் பல்லவர்கள்
ஆண்ட பகுதியிலே
பேணி உரைக்கப்
பெயரளவி லேனுமொரு
பாலா(று) இருக்கிறதே!
பாற்கடலா இருக்கிறது?
காலத்தைப் பகுத்தறிவைக்
கவிழ்க்கும் புராணத்தில்

பாற்கடல் உண்டாமென்று
பகர்ந்தால் இம் மண்டபத்தின்
நாற்புறமும் கூடியுள்ள
நண்பர் நகையாரோ?

'அன்பிற் கலந்திருந்த
ஆட்டனத்தி ஆதிமந்தி
துன்பத் தணலில்
துடிதுடிக்க வைத்ததுமோர்
ஆறன்றோ.... என்றே
அலைகடலார் பழையபுகார்
கூறிடலாம்; அவர்க்குரைப்பேன்;
கோவலனார் மாதவியைச்
சொல்லாலே சுட்டெரித்துச்
சுகம் தீய்த்துச் சென்றதெங்காம்?
பொல்லாத தாயான
புகார்க்கடலின் கரையிலன்றோ!

பழந்தமிழின் சுவையைப்
படைக்கும் தமிழண்ணல்†
அழகியதோர் நடையைநாம்
ஆற்றொழுக்கு நடையென்போம்!
இது இயற்கை தானே!
இதைக்கேட்டு யாரேனும்
கதிர்த்தமிழில் நடராசன்*

† தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், கவிஞர் தமிழண்ணல்.

* தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் நாவலர் ஔவை, துரை நடராசன்.

கடல்மடையே திறந்ததுபோல்
பேசுகின்றார் எனில்அஃதோர்
பிழைதானே? அலைக்கரங்கள்
வீசு கடலுக்கிவ்
வெயில் நாட்டில் மடையுண்டா?
இருந்திருந்தால் தனுக்கோடி
தண்ணீருக் குள்ஓடி
இருக்காதே! தனிக்கோடி
எனமாறி இருக்காதே

உமையவள்மேல் சிவனாருக்
குள்ள தொருகாதல்
இமயம்போல் பெரிதில்லை!
இருந்திருந்தால் தன்னுடம்பில்
கலை உமையை இருக்கவைத்துக்
கங்கைநதிப் பாவையினைத்
தலைமேலே தூக்கிவைத்துத்
தாங்கிக்கொண் டாடுவரா?

உமையவளை மலைமகளென்(று)
உரைப்பதும் பொய்! பகுத்தறியும்
உமைப்பார்த்துக் கேட்குங்கால்
உண்மையிலே ஆறன்றோ
மலைகளாம் என்றுரைப்பீர்!
மணிக்குறிஞ்சி என்கின்ற
மலையன்னை பெற்றமகள்
மாமுல்லை யில்மணந்து
மருதக் குழந்தையினை
மலர்க்கரத்தால் தாலாட்டி
கருணையுடன் நெய்தலுக்கும்
கதைசொல்ல விரைகின்றாள்.

மணியாற்றின் இருகரையில்
ஒருமைப்பாட்டைக் காட்ட
அணிகலனாய்ப் பாலங்கள்
அமைக்கின்றார் பொறியியலார்!
நாட்டொருமைப் பாட்டுக்கே
தன்னையொரு பாலமெனக்
காட்டிக்கொண் டிருப்பதெது?
நாகரிகக் கவினாறே!
ஆறும் மழையும் நீர்
அளிக்காவிட்டால் ஏரி
வேறு கதியின்றி
விரைவினிலே வற்றிவிடும்;

மழைபெய்யா விட்டாலோ
வான்பொய்த்த தென்பார்கள்!
மழை அதிகம் பெய்தாலும்
பேய்மழைதான் என்பார்கள்!
குடிக்க ஒருகை நீர்
கொடுத்தே உதவாத
கடல்நீர் நிறைந்தென்ன?
காஞ்சிரங்காய் பழுத்தென்ன?

ஆற்றின்கண் மட்டும்
அதிகப் பெருமையுண்டு!
நாற்றுக்குப் பால்வார்க்கும்
நற்றாயின் நற்குணமுண்(டு)
ஓ! டப்பாப் பாடல்கள்
ஒழியாதா என்பார்கள்
ஓடப்பா டல்கேட்டே
உளங்குளிர வழியுண்டு!

விழியைக் கவர்ந்து
விளையாடும் மீன்கள் உண்(டு)
அழகுண்டு; மின்விசையின்
ஆற்றல் மிகஉண்டு;

மாற்றார்க்கும் இம்மண்ணின்
மறவர்க்கும் முதல்யுத்தம்
ஆற்றங் கரையில் தான்
அந்நாளில் நடந்ததுவாம்!
அலெக்சாந்தர் என்கின்ற
அயல்நாட்டுப் பேரரசன்
மலைமார்பன் புருடோத்த
மன்-என்னும் மன்னனையே
சிந்துநதிப் பெண்ணின்இடை
சிறுத்தஇடம் பார்த்திரவில்
வந்துவென்றான்; அன்று
முதல்-கிரேக்கர் வாய்மொழியால்
சிந்து நதிபாய்ந்து
செழிக்குமிந்த மயில்நாடு
சிந்தியா ஆயிற்று;
சிலகாலம் சென்றபின்னர்
இந்தியா ஆயிற்(று);
இதுமாறி அதிவிரைவில்
'ஹிந்தியா' ஆனாலும்
ஆகலாம்; வியப்பில்லை!

பூகோளப் படத்தினிலே
போடப்பட் டுள்ளநதி
பூ(க்) கோல நதியில்லை:

பொய்நதியே! நான்நதியின்
வண்ணக்கோ லந்தன்னை
வருணிக்க வா கொஞ்சம்?

எண்ணம்போல் வரும் வெள்ளம்
இசைவெள்ளம்! மணல்மேட்டுக்
கரையோரம் 'கவின் வெள்ளம்!
கண்ணுக்குத் தண்ணிழலை
வரையாது வழங்குகின்ற
வள்ளல் மரக்கூட்டம்!

புன்னை! சரக்கொன்றை!
பூவை இதழ்ச்சுவையும்
என்னிடத்தில் தோற்கும்
எனுமிளநீர்த் தென்னைகள்!
விண்ணை இடிக்க
விளைமூங்கில்! விரைவாகப்
பெண்ணைப்போல் வளர்த்தினத்தைப்
பெருக்குவதில் கவனமுள்ள
வாழை! பூ நாகங்கள்
வாழ இடங்கொடுக்கும்
தாழை! நம் ஔவை†
தலைமுடிபோல் பூத்திருக்கும்
நாணல்! கா தலர்போல்
நயந்து பிணைந்திருக்கும்
கோணல் செடிகொடிகள்!
புதர்மண்டிக் கிடக்கின்ற
கோரைப்புல்! அதனருகே

---

† தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

கூட்டம்போட் டோடிவரும்
நாரைப்புள்! அடடே!
நலம்பாடிப் பாய்ந்துவரும்
நதியைஎன் மெய்ந்நாவால்
நன்மைக் கெதிரான
சதியைக் கொடும்பகையைச்
சாய்த்தொழித்துச் சமூகத்தின்
வறட்சி நிலைமாற்றி
வாழ்வில்புத் துணர்வூட்டும்
புரட்சிக் கவிஞரெனப்
புகழ்வேன் நான்..... போதாதா?

வாலிபத்தைப் போல்மலர்ந்த
வண்ண மலர்த்திரளை
மூலிகையை இலைதழையை
மோகித்துச் சுமந்தபடி
ஆறு வரும்போ(து)
அழகாய் அமைந்ததுறை
தோறும் புனலாடும்
தோகை மயிலார்தம்
கூந்தலுக்கு நறுமணத்தைக்
கொடுக்கும்; இதையறியா(து)
'ஏந்திழையார் கூந்தல்மணம்
இயற்கையிலா செயற்கையிலா...
என்றேதோ இறைவனுக்கும்
என்முன்னோன் கீரனுக்கும்
அன்றொருநாள் இப்பதியில்
அனல்வாதம் எழுந்ததுவாம்!
இங்கின்றோ இவ்வாதம்
எழுவதில்லை; எழுந்தாலும்

மங்கையர்தம் கூந்தல்
மணம்பற்றி இருக்காது-
குயிலின் நிறமெடுத்துக்
கொண்டுள்ள கூந்தலே
'இயற்கையா செயற்கையா'
என்றிருக்கும் இல்லையா?

ஆறென்றால் 'பொறு' என்றோர்
அர்த்தமுண்டு; அதனால்தான்
ஆறான கங்கை, தன்
அருமை தெரியாமல்
புனிதம் எனக்கூறிப்
போடும் பிணங்களையும்
இனிதாய்ப் பொறுத்துக்கொண்
டிருக்கிறது போலுமின்று!

ஆறென்றால் 'வழி'யென்றும்
அர்த்தமுண்டு; பசிநெருப்பில்
நீ றாகி உருவழிந்து
நின்றோர்க்கு முன்னாளில்
ஏற்ற வழிகாட்டும்
இயல்புண்டு; அதனைத்தான்
ஆற்றுப் படைநூல்கள்
அத்தனையும் சொல்வதுண்டு!

'புனலா(று) அன்று; இதுபூம்
புனலா(று)[†] என்பது போய்ப்பூம்

---

† புனலியா றன்றிது பூம்புனல் யாறு''-சிலம்பு.

புனலா(று) அன்று! - அதுநீள்
மணலா(று) இன்று!-என்றேநாம்
வேடிக்கை யாயுரைக்கும்
வேகவதி[†] யாற்றினிலே
கோடிக்கை வணங்கி நிற்கக்
கோடைச்சித் திரைநாளில்
கள்ளழகர் இறங்குகின்ற
காட்சியினைக் கண்டிருப்பீர்;
உள்ளபடி சொல்வதென்றால்
உண்மைக் 'கள் ளரும்' வீணாய்த்
தம்மை 'அழகரெ'னத்
தருக்கித் திரிவோரும்
உம்மைத் தொகையாகி
உறுத்திக்கொண் டுள்ளதங்கள்
கைவரிசை காட்டிடவே
இறங்குவதும் இந்நாள்தான்!
கை, வரிசை யாய்க்கம்பி
எண்ணுவதோ பின்னால்தான்!

செந்தமிழர் இனிதாகச்
சேரஇளம் பெண்களுடன்
சுந்தரத் தெலுங்கினிலே
பாட்டிசைத்துத் தோணிகளைச
செலுத்தி விளையாடச்
சிறந்த இடம் எனக்கவிஞன்
நலமான சிந்து
நதியைத்தானே சொன்னான்!

---

† வேகவதி - வைகை

கடத்தற் கரிதான
கடலையே ஆறுகளால்
கடந்திடலாம் என்றால்
கதை என்பீர்; பிறவிக்
கடலை உயரொழுக
வாறுகளால் எளிதாகக்
கடந்திடலா மாம்... முற்றுங்
கடந்தோர் உரைக்கின்றார்!

அடியேன் இனிமேலும்
ஆற்றைப் புகழ்ந்து சென்றால்
கடல்கத்தும்; மழைமிரட்டும்;
காட்டேரி சலசலக்கும்
கண்ணீர் விடும் எல்லாம்
ஆறாக! இதைப்பார்த்துத்
தண்ணீர்க் குடும்பத்தில்
தகராறு! பிள(வு)!'-என்று
பத்திரிகைக் காரர்கள்
பத்திபத்தி யாய்எழுதி
எத்திசையும் பரப்பிவிட்டால்
என்னாகும் கெளரவமென்(று)†
அஞ்சி முடிக்கின்றேன்
அஞ்சி★ வளர்த்ததமிழ்
எஞ்ஞான்றும் வாழ்க
இனிது

---

† 'நீர்க்குடும்ப' கெளரவம்.

★ அதியமான் நெடுமான் அஞ்சி.

# கதிர்

*தலைவர்:* *கவிஞர் முடியரசன்*

*இடம்:* *இராசிபுரம் இலக்கிப் பெருமன்றம்*

*இலக்கியப் பெருவிழா*

*நாள்:* ***25 - 9 - 1966***

*பொதுத்தலைப்பு:* *விண்குடும்பம்*

# கதிர்

❖

விண்குடும்பத்தை விதியுடன் பொருத்தி
''இராசிபலன் சொல்ல முயலும்'' என்று
கதையளப் போர்க்குக் கை கொடுக்காமல்
விண்குடும்பத்தை விழியில் நிறுத்திச்
சொல்லணி புனைந்து ''சுடர்த்தமிழ் அன்னையின்
இராசிபல காட்ட இயலும்'' என்று
கவியிசைப் போர்க்குக் காது கொடுக்கும்
நெய்போன்ற நெஞ்சினர் நிறைந்த இவ்வூர்
இராசி புரம்தான்; இராசி புரமேதான்!

அரங்கில்,
கதிரவன் போலக் கம்பீரமாக
விளங்கும் கவிஞர்† வேந்தே வணக்கம்.
கதிரவன் முகத்தைக் கண்டதா மரைபோல்
மனமும் முகமும் மலந்திருக்கின்ற
அன்பரீர். வணக்கம்! அன்னையீர், வணக்கம்!

விண்குடும்பத்தை விரிகதிர்ச் செல்வன்
தன் குடும்பம் எனச் சாற்றுதல் தகும்; பிற
கோள்கள் கதிரவன் குழந்தைகள் என்று தான்
விஞ்ஞானங் கண்டவர் விரித்துரைக் கின்றார்.

---

† கவியரங்கத் தலைவர் - முடியரசன்

கன்னடம் தெலுங்கு கவின்மலை யாளம்
துளு எனும் மொழிகளைத் தோற்றிய பின்னும்
இளமைத் திறத்துடன் இயங்கும் தமிழ்போல்
வியாழன் செவ்வாய் வெள்ளி புதன் சனி
என்னும் கோள்கள் தன்னுத ரத்தே
உதித்(து) ஒவ்வொன்றும் பற்பல வாகச்
செய்த பின்னும் சிதையா தின்னும்
இளமைத் திறத்துடன் இயங்குவோன் கதிரவன்†

மொட்டைத் தலைக்கும் முழங்கா லுக்கும்
முடிச்சுப் போட முடியா(து); ஆயினும்
விண்ணுக்கும் இந்த மண்ணுக்கும் தமிழர்
தொன்னாளி லேயேதொடர்பு கண்டனர்;
தொடர்பு கண்டு சுடரும் கோள்களுக்(கு)
ஏற்றபெயர்கள் இட்டு மகிழ்ந்தனர்.

கலத்தில் ஏறிக் கடல்மேற் சென்ற
தமிழன் எவனோ தண்ணீர் மேடையில்
வெள்ளிப் பணங்களை வீசினாற் போலப்
பளிச்சென் றழகாய் வெளிச்சங் காட்டித்
துள்ளும் மீனின் தொகையைக் கண்டு, பின்
நகைக்கும் வான நட்சத்திரங்களைக்
கண்டு, நல் ஒற்றுமை கண்டு வியந்து
'விண்மீன்கள்' என்று விளம்பினான் போலும்!

---

† இப்பகுதியில் மனோன்மணீய ஆசிரியர் தமிழைப் புகழக் கையாண்ட தொடர்கள் பயின்றுவருதல் காணலாம்.

திங்கள் என்றும் திகழ்மதி என்றும்
அம்புலி என்றும் அழகிய பெயர்கள்
இருக்க 'நிலவெ'ன் றின்னொரு பெயரிட்(டு)
அழைத்தவன் உண்மையில் அமைதி விரும்பியே;

அண்டை வீட்டிற் சண்டை நிலவுகிற(து)
என்றெவ ரேனும் இயம்புவ துண்டா?
அமைதி நிலவுவ தாகத் தானே
அறைகின் றோம் நாம்! ஆர்ப்பரிக் காமல்
நெடுவானில் அமைதியாய் நிலவுவ தாலே
திங்களை,
ஒருவன் 'நிலவென' உரைத்தான் போலும்!

இவற்றைக் காட்டிலும் எல்லையில் லாப்புகழ்
பரிதிக் குண்டெனப் பகர்ந்திட முடியும்
எனும்விதத் தில்பெயர் இடநினைத் தொருவன்.
அண்டத்தி லுள்ள கோள் அனைத் திற்கும்
ஆதி அவன்எனும் உண்மையை ஆராய்ந் (து)
ஆதவன் என்றே அழைத்தான் போலும்!

இயற்கையைப் போற்றி இன்புற் றிருந்த
பண்டைத் திராவிடர் பரிதிக்(கு) உயர்ச்சி
தந்தனர்; துதித்தனர்; தாள்பணிந்(து) ஏத்தினர்.
எகிப்தியர் யவனர் இன்னும் பற்பலர்
கதிரைத் தங்கள் கடவுளாய்க் கருதி
ஆலயங் கட்டினர்! அந்நாள் மன்னர்கள்
எங்கள் நற்குலம் இரவிகுலம் என்றே
நெஞ்சம் தூக்கி நிமிர்ந்துரைத்தார்கள்!
வாலியின் பழியால் வதைபடும் அயோத்தி

இராமன் குலத்தை இரவிகுலம் என்றே
புலவர் பலரும் புகழ வில்லையா?

சாத்தனும் ஒட்டக்கூத்தனும் கம்பனும்
காவிரிச் சோழரைக் கதிரவன் சேய்களாய்ச்
செப்ப வில்லையா? ஒப்ப வில்லையா?
தும்பி மலரைச் சுற்றுவ துண்டு;
மலர்போய்த் தும்பியைச் சுற்றுவதுண்டா?
தெருவிற் செல்லும் சுந்தரி யாளை
இளைஞர் சுற்றி வருதல் இயற்கை;
சுந்தரி இளைஞரைச் சுற்றுதல் அரிதாம்!

ஆனால்
திங்கட் செல்வியும் பூமி தேவியும்
கால மெல் லாம் கதிர்க் கோ மானைச்
சுற்றி வருதல்† பற்றி நினைத்தால்
நங்கையர்க் குரிய நாண நகையை
எங்குவிட் டார்கள் இவர்கள்? என்று
நகைவரும்! சொன்னால் பகைவரும், அல்லவா?

என்றும் கதிரோன் இளையோன் என்பதை
இன்னும் கொஞ்சம் எடுத்துரைக் கின்றேன்.
கொஞ்சும் கணவனுக்(கு) இளையோன் கொழுந்தன்
இலையில் இளையது எழிற்கொழுந்(து); இல்லையா?
சுடர்விட் டெரிகிற சுடு நெருப் பைத்தான்

† திங்களும் பூமியும் கதிரவனைச் சுற்றுகின்றன என்பது அறிவியல். திங்களையும் பூமியையும் பெண்களாகச் சித்திரித்தல் கவியியல்.

கொழுந்துவிட்டெரிகிற(து) என்கிறோம் இல்லையா?
வெம்மைக்கு மட்டும் முதிர்ச்சி மிகுதி
ஏற்பட ஏற்பட இளமைத் தன்மை
கிடைக்கும்! வன்மை கிடைக்கும்; எனவே
என்றும் கதிரோன் இளையோன் இல்லையா?

அன்றொரு நாள். அவள் அரும்பு! நதியில்
குதித்துக் குதித்துக் குளித்து விட்டுச்
சிற்றாடை தன்னைச் சிறுமணற் பரப்பில்
காய வைத்தாள்; கதிரவன் உதவினான்.
இன்னொரு நாள். அவள் எழில்மல ராக
மாறிய பருவம்! மங்கைநீ ராடி
நிலந் தொடும் தனது நீண்ட கூந்தலை
உலர்த்த எண்ணி உயர்ந்த மாடியில்
காத்து நின்றாள்; கதிரவன் உதவினான்,
இப்போ(து) அவளோ, இளமை கன்னிமை
இழந்த கூனற் கிழவி! அதோ அத்
திண்ணையில் 'டகர' எழுத்துப்போல், கால்,
நீட்டிக் ''கூதல் ஆட்டு கின்றதே
வெயில் அடிக் காதா விரைவில்?'' என்றுதன்
'பொக்கை வாயைத் திறந்து புலம்பி
உட்கார்ந் துள்ளாள்; உதவுவான் கதிரவன்'

இப்படி முதுமை எல்லார்க்கும் உண்(டு): எனில்
கதிரவ னிடமதைக் காணவொண் ணாது.
கதிரவன் வாழ்வில் கருக்கல் என்றும்
காலை என்றும் கடும்பகல் என்றும்
மாலை என்றும் மாற்றம்உண்(டு); இம்
மாற்றமல் லாற்கதிர் மகனிடம் முதுமையை
எதிர்பார்த் தாலோ ஏமாற்றம் உண்டு!

இளவே னில்கதிர் கொலுவீற் றிருக்கும்
இனிய பருவம்; எனினும் மற்ற
பருவங் களையும் படைப்பவன் அவன்தான்!
கோடை என்னும் கொடைதரு வான்: அக்
கோடை தருவதால் கொல்லும் தேர்வுக்
கொடுமுறை நீங்கி விடுமுறை வாங்கிப்
பள்ளிசைப் பார்கள் பள்ளிச் சிறார்கள்!

கதிரவன் பார்வை அதிகம் படாத
குளிர் நாட்டார்கடுங் குளிரை வெறுத்துக்
'கோடையே வருக என்று கூறுவார்.
பல்சிறப் பமைந்த நல்வர வேற்பைச்
'சூடான வரவேற் பென்று'[†] சொல்வதால்
அவர்க்குக்
கதிரவன் மேல்தான் காதல் எனலாம்.

இந்தக்
குடும்பத் தலைவனைக் கோகுலக் கண்ணன்
மறைத்த தாய்ச்சொல்லி மா இருட்டடிப்புச்
செயச், சிலர் நினைத்ததைச் சிந்தித்துப் பார்த்தேன்:

பின்னர்
''கதிரைப் பார்க் காதே, கண்கெடும் என்ற
குருடர்சாத் திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே,
என்றமா கவிஞன்[★] எழுத்தையும் எண்ணிப்

---

[†] **Warm welcome**

[★] பாரதி

பார்த்தேன்; பரிதியைப் பார்க்க எழுந்தேன்,
பார்த்தேன்! உயிர்க்குப் பசுந்தேன் வார்த்தேன்!
என்னையும் மீறி என்நா இசைத்த(து)
இப்படி;

கதிரே வணக்கம்! கதிரே வாழ்கநீ!
வள்ளுவர்க் கும் அவர் மணிநூ லுக்கும்
பலபெய ரிட்டுப் பாராட் டுதல்போல்
பரிதி என்றும் பகலவன் என்றும்
ஆதவன் என்றும் ஆதித்தன் என்றும்
சுடரோன் என்றும் சூரியன் என்றும்
பலபெய ரிட்டுப் பாராட்ட வைத்தாய்;

வைகறைப் பொழுதில். வானில் உன் துணையால்
தங்கு(ம்) வண் ணம்பசுந் தங்க வண்ணம்!
மாலை வெயிலோ மஞ்சள் வண்ணம்!
மலைமகள் தலையில் அலைமகள் மார்பில்
சிந்தும் வண்ணச் சேர்க்கை ஆயிரம்
அடடா? தூரிகை தொடாதுநீ வரைந்த
வெற்றிச் சித்திரம் விசித்திரம்! விசித்திரம்!
மறவேன் நீஓர் 'மணி'யான ஓவியன்!

வெயிலின் அருமை நிழலில்என் பாய்நீ?
நிழலைத் தரும்ஒரு தருவளர் வதற்கு
நீர் தரு வாய்நீ! ஒளிதரு வாய்நீ

ஆமாம்,
நானிலம் எங்குமுன் கோனிலை காண்கிறேன்
கோடை வெயில்நீ கொடுக்காவிட்டால்
பட்டணத்துள்ள பணக்காரர்கள்

மலைகளை நோக்கி வருவ தெங்கே?
மலைசூழ் நாட்டு மக்க ளுக்குப்
பிழைக்கும் வழிகள் பெருகுவ தெங்கே?

உன்வெப் பத்தை உதவா விடில், நீர்
உண்டு - முகில், சூல் உடைந்து மாமழை
கொட்டுவ தெங்கே? குளிர்ந்த முல்லைக்
காட்டுச் செழுமையைக் காண்ப தெங்கே?
மருதம் வாரித் தருவ தெங்கே?
வெயில் நீ தராவிடில் விரிகடற் கரையில்
உப்புடன் மீனை உலர வைத்து
வெளி நாட்டாரும் விரும்ப அனுப்பும்
நெய்தல் தொழில்வளம் நிலைப்ப தெங்கே?
ஆயினும்
பாழாய்ப் போன பாலையால் மட்டும்
பாவம், உனக்குப் பழிதான்.... ஆயினும்
பாட்டுக்(கு) எதுகைபோல் பரிதியுன் பொற்கை
நாட்டுக்குத் தேவை நல்கும் நல்லகை!
வான்உன் இருக்கை! வளரும் இருட்டைத்
தின்று விளையாடித் திரிவதுன் வாழ்க்கை!
வன்மை என்றும் வழங்கும் - வீரத்
தன்மை யுள்ள தலைவன்நீ, மீன் எனும்
மின்னிலை களையும் மெலியும் நிலாவையும்
முன்னிலை கொள்ள விடாமற் படர்க்கை
ஆக்கி வேடிக்கை பார்க்கும் செய்கை
அற்புதச் செய்கை! ஆனந்தச் செய்கை!

காலையின் ஒற்றைக் கண் நீ! கீழ்த்திசைக்
குயவன் நற்கரம் கொஞ்சும்சக் கரம் நீ!
ஒளிக்(கு) உறைவிடம்! இருட்டுக்கு விடம்நீ
ஆகாய நாட்டின் அக்கினிச் சுனைநீ;

விளையாட முடியாத வெந்தழற் பந்துநீ!
பூமிக்கும் விண்ணுக்கும் பொதுச்செய லாளன்நீ!
கமலச் செல்வியின் காதற் கொழுநன்நீ!
காலச் செல்வனின் கணக்குப் பிள்ளைநீ!

இப்படி
இசைத்துநான் இருக்கையில் இருண்டமுகில்போல்
நீண்ட கூந்தலும் நெளியும்[1] மின்னல்[2]
இடையும் விற்[3] புருவமும் எழில் நிலா[4] முகமும்
பன்மீன்[5] செய்யும் பால்வெண்ண கையும்
படைத்தஎன் காதற் பத்தினி வந்து
கதிர்ஒளிக் கண்ணாற் காந்தம் செய்து
பார்த்தாள், ''தனியாய்ப் பார்த்து மகிழ்தல்
என்னவோ அத்தான்? இயம்புக'' என்றாள்.

அப்போது,
மாலை யழகில் மயங்கி யிருந்தநான்
''பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன்! ஓகோ
என்னடி, இந்த வண்ணத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள் - வெம்மை தோன்றாமே!
எரிந்திடும் தங்கத் தீவுகள் ! பாரடீ!
நீலப் பொய்கைகள்! அடடா - நீல
வண்ணமொன்றில் எத்தனை வகையடீ!

---

† 1 - 5 முகில். மின்னல், வில், நிலா. மீன் - இவை பிற கவிஞர்களால் பாடப்பட்ட கவித் தலைப்புகள்.

எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையில் மிதந்திடும் தங்கத்
தோணிகள்'' சுடரொளிப் பொற்கரையிட்ட
கருஞ்சிக ரங்கள் - காண்டி! ஆங்கு
தங்கத் திமிங்கலம் தாம்பல மிதக்கும்
இருட் கடல் ஆஹா! எங்கு நோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்†''
என்றேன்; பாரதி இலக்கியம் பாடி.

'ஞாயிறு போற்று ஞாயிறு போற்றுநீ!'
என்றேன்; அவளும் என்னுடன் சேர்ந்தாள்
''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்★''
என்றோம்; நீங்களும் என்னுடன் சேருவீர்!
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும் ஞாலம் வாழ்கவே!

❖

---

† இது பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் உள்ள ஒரு பகுதியாகும்.

★ இளங்கோவடிகள்.

# கவிஞர் மீராவின் பிற நூல்கள்

| | |
|---|---|
| குக்கூ | 30-00 |
| ஊசிகள் | 30-00 |
| கோடையும் வசந்தமும் | 60-00 |
| மீரா கவிதைகள் | 60-00 |
| கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள் | 50-00 |
| வா இந்தப் பக்கம் (கட்டுரை) | 30-00 |
| மீரா கட்டுரைகள் | 80-00 |

வீரக் கதைகளையும்
நாடோடிப் பாடல்களையும்
நெஞ்சு கனக்கச் சுமப்பதால்
ஒவ்வோர் ஊரும் நூல் நிலையமாக
விளங்கும் முகவை மாவட்டம் -
ஓய்வில்லாத
சரித்திரப் போராட்டங்களால்
மண்ணெல்லாம் சிவப்பாகிவிட்ட
அந்த மறவர் பூமியின்
புரட்சிக் கவிஞர்
'சாகாத வானம் நாம்'
என்ற பாடலின் மூலம்
பாரதிதாசனின்
வாரிசாக மாறியவர்
அண்ணாவால்
பலமுறை பாராட்டப்பட்டு
அவருடைய கடைசிக் கடிதத்திலும்
குறிப்பிடப்பட்ட
கொள்கை வீரர்

நா. காமராசன்